# சொல்லின் செல்வர்
# அண்ணா



# சொல்லின் செல்வர் அண்ணா

உடுமலை பி. வி. இராமசாமி

(துணை ஆசிரியர், நவ இந்தியா—விடுதலை).

அன்பு நிலையம்

13, பிராட்வே சென்னை-1

பதிப்பு 1969 மார்ச்சு.

133319

விலை ரூ. 1-50.

தயாரிப்பு:

கே. ஆர். நாராயணன்.

ராயன் அச்சகம். சென்னை-1.

## எழுதினோன்

அறிஞர் அண்ணாத்துரை அவர்களுடன், நான் இருந்து பணியாற்றக் கிடைத்த காலத்தில், அவரைப் பற்றி எனது கலையார்வ உள்ளத்தில் எழுந்த கருத்து அலைகளின் தொகுப்பே இன் நூல்.

அண்ணா அவர்கள் அரசியலில் பேரறிஞராகி அரசோக்கும் இந்நிலையிலே இதனை மீண்டும் வெளியிடத்துணிந்தேன் பெருமையான அன்பின் எழுச்சியால்.

உடுமலை பி. வி. இராமசாமி.

## நுழைவாசல்

இருண்ட சமுதாயத்துக்கு அறிவு ஒளி வீசிய அண்ணல் அறிஞர் அண்ணாதுரை அவர்களைப் பற்றி விருப்பும், வெறுப்பும் கொண்டவர்களால் எழுந்த ஏடுகள் ஏராளம். அந்த சொல்லின் செல்வரைப் பற்றி. சிறந்த நூல் ஒன்று வெளியிட வேண்டுமென்று ஆசைப் பட்டோம், வெளியிடுகிறோம்.

அண்ணாவைப் பற்றி எழுத தகுதியும் திறமையும் கொண்டவர் இந்நூல் ஆசிரியர் பி வி. இராமசாமி அவர்கள், விரல் விட்டு எண்ணக்கூடிய சிறந்த எழுத்தாளர்களிலே "பிவியாரு"ம் ஒருவர் "விடுதலை"ப்பணி மனையில் நீண்டகாலம் தொண்டாற்றி விட்டு, உடல் நலம் குன்றி ஓய்வு பெற்றிருக்கும் வேலையில், எங்கள் விருப்பத்தை நிறை வேற்றி யமைக்கு நன்றி.

பதிப்பாசிரியர்.
K. R. நாராயணன்.

# சொல்லின் செல்வர்

# அண்ணா

●

**காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்**
**மீக்கூறும் மன்னன் நிலம்**

யார்? இவரா? என்னப்பா......கதை அளக்கிருய்! அதோ. மேடைமீது. மேஜையின் இடது புறத்தில் அமர்ந்திருக்கிருரே ஒருவர் ஜிப்பாவும் மேல் துண்டும் போட்டுக்கொண்டு, அவரையா சொல்கிருய்?

ஆம். அவரேதான்.

பார்த்தால் அப்படித் தெரியவில்லையே— அறிஞரைப் போல.

தெரியவில்லையா? ஏதைக்கொண்டு, அப்பனே!. நிர்ணயிக்கிருய்? அறிவை, ஆற்றலை, பேச்சின் வளத்தை? மைசூர் ஜரிகை தலைப்பாகை பேசுமோ அறிவுரைகள்? காஞ்சீபுரம்

பஞ்சகச்ச மடிப்பு வேட்டியிலே, கிளாஸ்கோ மல்லிலே, கல்வி யறிவு மலர்ந்து காணுமோ? சேலம் விசிறி மடிப்பு அங்க வஸ்திரத்திலே சொல்லாற்றல் காய்ந்து தொங்குமோ; வைரக் கடுக்கன் மின்னல் வீச்சிலே-தங்கத் தோடா, கை கடிகாரத்திலே, பராக்குக் கூறும் பக்தர் குழாம் கும்பலிலே, சந்தனப் பொட்டிலே, வாசனை வீச்சிலே, ஜவ்வாது, மணத்திலே, காண விழைந் தயோ அறிவை, சொல் திறனை? பத்தாம் பசலி பேதை நீ. பண்டார சந்நதிகளின் திருநீரிலே, அலங்காரத்திலே, கருத்தைப் பறிகொடுத்த பாமரனே கேள்; ஒரு அரை மணி பொறுமை காட்டி; அவர் சொல் மாரியை—மணி கொழிக் கும் கருத்துக் கோவைகளை—அறிவு வளமாக் கும் அறிவுரைகளை—உழைப்புச் செல்வ உறுதி மொழிகளை—பேடியும் "இதோ, நான் சமர்க்களத் தில் குதிக்க சித்தம்" என்று குதித்தெழுந்து, வீர முழக்கம் செய்யும் வீர மூட்டும் வாசகங்களை. அது வரை அடக்கி வை உன் கருத்தை, உரு விலே இல்லை அறிவு—உருவம் அறிவுக்குச் சிறப் பாகாது. அறிவு அளித்திடும் உருவத்திற்குச் சிறப்பு, சிறப்புக்கும் உருவம்—சிறப்பு கருத்து களுக்கு உருவம், சிறப்புச் செயல்களுக்கு உரு வம், சிறந்த வாழ்க்கைக்கு உருவம். மணி சிறிது, ஒளி மிக்கது, மதிப்பு, பெரிது. பேச்சைக் கேட்டு பின்னர் சொல் உன் கருத்தை—அறிவு ஆழியின் திறத்தை.

O

அதென்ன திருவிழாவா ? வான வேடிக்கையா ? பொருட் காட்சியா ? நாட்டிய ராணியின் ஆட லரங் கேற்றமா ? நூற்றுக் கணக்கில், ஆயிரக் கணக்கில் — மாபெரும் மைதானம் — கலாசாலை சிற்றரங்கு—நாடகப் பேரரங்கு—சங்கத்தின் சிறு விடுதி—முச்சந்தித் தெரு—சந்து வெளி—எங்கே தானிருக்கட்டுமே, அங்கெல்லாம் காணலாம் ஆயி ரம் ஆயிரம் மக்களை.

வடக்கத்தியார்களை, காட்சிக்கு அழைத்து பெருங்கூட்டம் கூட்டி, பெருமை பேசிக்கொண்ட காலம். "நம்மவர்களுக்கு உண்டா, இவ்வளவு மதிப்பு —ஆதரவு—ஆற்றல்—கவர்ச்சி !" என்று தாயக—தாயக மக்களின் அறிவையும் ஆற்றலை யும் குறைத்துக் கூறி, அயலாருக்கு பட்டாபி ஷேகம் செய்து மகிழ்ந்த யுகம்.

பஜனை மடம், கதா காலட்சேபம், ஏதோ மோட்சத்தைத் தேடும் கிழடுகள், சின்னஞ் சிறு குழைந்தைகள், அதுவும், சுண்டல் வடை பிரசாதம் தரப்பட்டால்தான்; ஏதோ சில பத்து எண்ணிக்கையில் கூடுவர். இன்றேல், "இந்தக் குளிரிலும் புழுக்கத்திலும் பஜனையாம் ? காலட்சேபமாம் ? போப்போ" என்று வெறுத்து, வீட்டோடு இருந்த காலம். அதுவும் தாய்மார்கள் வெளியிடங்களில் தலை காட்டாத "படிதாண்டா பத்தினி" களின் யுகம் ? இந்தப் பத்தாம் பசலி யுகத்தை—பண்டை,

ருசியை விரட்டியடித்தார் பல்கலைப் பேரறிஞர் அண்ணாதுரை அவர்கள்.

அயலூர் சரக்குதான் சிறந்தது என்று தேச பக்தசிகாமணிகள் நடத்திய திருக்கூத்தின் பொய்மையை அம்பலமாக்கினார். "இதோ இங்கேயே யிருக்கிறது. தமிழ் நாட்டிலே—தாயகத் திலே அறிவு—அறிவாளர், ஆற்றல் மதி வாணர்; சொல்லின் வல்லர் வழிதுறை காட்டும் நல்லறிவுச் செம்மல்கள்—தலைவர்கள் " தளபதிகள்—மாவீரர்; கள் " என்று நிரூபித்தார்—நிரூபித்து வருகிறார் சொல்லின் செல்வர் அறிஞர் அண்ணாதுரையவர் கள்.

திராவிட நாட்டிலே—தமிழ் மொழியிலே—சொற்பொழிவிலே ஈடுமெடுப்புமற்று விளங்குகிறார். சின்னஞ் சிறு குழந்தைகள் முதற்கொண்டு பாட்டன் பாட்டிகளும் மயங்கிவிடுவர் அவருடைய பேச்சிலே; வாதத்திலே, அறிவு மொழி விளக்கத் திலே.

அதோ, ஒலிபெருக்கியிலே அறிவிக்கப்படு கிறது; "அறிஞர் அண்ணாத்துரையவர்கள் பேசப் போகிறார்" என்று.

ஆம். அந்த மேஜை ஓரத்திலே அமர்ந்திருந்த அதே சின்ன உருவம்தான் வந்து நிற்கிறது ஒலி பெருக்கியின் முன். இதுவரை இருந்த

சலசலப்பு ஒலி அடங்கிற்று. கூட்டத்தினருக்குள் நடந்து வந்த கருத்து வெளியீடு—சொந்தப் பேச்சுக்களுக்கும் முற்றுப் புள்ளி.

எங்கும் ஒரே அமைதி. அந்த பல்லாயிரக் கணக்கான கண்களும் பாய்கின்றன மேடையை நோக்கி. நிமிர்ந்து உட்காருகின்றனர் ; படைக்கப்பட்ட அருசுவையுண்டி உண்ண முற்படுவோர்கள் போன்று. காதுகளை கூர்மைப் படுத்திக் கொண்டு உற்றுக் கேட்கின்றனர்—நீதி மன்றத்திலே கூறப்படும் மிக மிக முக்கியமான வழக்கில் தீர்ப்பைக் கேட்பவர்களைப் போன்று.

“ தோழர்களே ”

அந்த ஒரு வாசகம். இதிலே எப்படித்தான் அவ்வளவு கவர்ச்சிச் சக்தி பெற்றதோ ! இச்சொல் நம் காதில் பாய்கிறது ; உள்ளத்தைத் தொடுகிறது. புளகாங்கிரதமளிக்கிறது ; உள்ளமும் உடலும் மகிழ்ச்சிப் பெருக்கு ; “இதோ, உனக்கு புதையல் வாங்கிக்கொள் ” என்று கூறுவதை கேட்பதுபோல் சிலிர் சிலிர்க்கிறது நமது உடல்.

ரயில் வண்டி ; மெயில் வண்டி புறப்படுவது போலத்தான் இருக்கிறது அவர் பேச்சின் ஆரம்பக் கட்டம். நிலையத்தைக் கடந்து சில காதம் வந்து விட்டது அந்த மெயில் வண்டி

அதன் வேகம்; அதிலே பாய்கிறது கருத்து—போகும் போக்கிலே; அந்தப் போக்கிலே; தென்படும் இயற்கைக் காட்சிகளிலே. நம் தொல்லை — கவலை பலவற்றையும், மறந்து விடுகிறோம் இந்தப் பிரயாண காட்சி பான்மையிலே அறிஞரின் பேச்சுத் தொடங்கிவிட்டது. துவக்கக் கட்டம் தாண்டி விட்டது. மதகு திறக்கப்பட்ட வெள்ளம்போல் சொற்கள் அவர் வாயினின்றும் புறப்படுகின்றன—ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு கருத்துரை-ஆராய்ச்சியின் அமுதக் கூட்டு. படைப்பது ஒருவர். உண்டு மகிழ்வதோ, ஒரே காலத்தில் பல்லாயிரவர். அறிவொளியின் அணிமலர்கள்; அணிவிப்பதோ ஒருவர். அணிந்து கொள்வதோ பல்லாயிரவர்; பணச் செலவின்றி. சொல்வதோ ஒருவர்—பயன் படுவதோ பல்லாயிரவர்; அலுப்பில்லை சலிப்பில்லை; இன்னும் கொஞ்சம்—இன்னும் கொஞ்ச நேரம் பேச மாட்டாரா என்ற ஆர்வம்தான் தூண்டுகோல் போட்டபடி யிருக்கும்—ஒரு மணி—இரண்டு மணி—மூன்று மணி நேரம் கடந்தாலும் கூட.

இத்தகைய வசிய சக்தி, இவரது சொல்லிலே என்ன இருக்கிறது? இக் கவர்ச்சியின் பொதுப் படை முக்கிய காரணம்; அறநூலளித்த அறிஞர் பெருமான் திருவள்ளுவரும் வகுத் தளித்தாரே; சொல்லின் இலக்கணம் "சொல்லின் சொல்லுக சொல்லில் பயனுள" என்று. இந்த நன்னெறி நன் மொழிக்கு—அறிவுரைக்கு முற்ற முற்றப் பொறுத்தமானவை; இந்தக் கலைச் செல்வரின்

கலைச் செல்வச் சொற்பொழிவுகளே யாகும். இந்த சொல்லின் செல்வரின் வாயினின்று ஒலிக்கும் ஒவ்வொரு வாசகமும்—ஒவ்வொரு சொல்லும்; ஒவ்வொரு கருத்தும்—ஆயிரமாயிரம் மதிப்புப் பெறும்; ஆயிரமாயிரம் வகைகளில். நாம் மாத்திர மின்றி நம் சுற்றமும் சூழ்ந்தவரும் நட்பினரும் பயன்படத் தக்கவை. அரும்பெரும் மூவா மருந் துக் கொப்பானவை. அவரது வாயிலே ஒலித்த அக் கருத்துக்களிலே நாம் கருத்துச் செலுத்தின் நன்னம்பிக்கையுடன், பயனெய்த வேண்டுமென்ற நன்னோக்கத்துடன்; திண்ணம் திண்ணம் நலன் பெறுவது. அதுவும் எப்பொழுதோ—எங்கோ—யாருக்கோ, யாராலோ என்ற அய்யமும் கவலை யும் கொள்ளத் தேவையில்லை. இப்போதே, நமக்கே—நம்மாலேயே; நம் அறிவையும் உழைப் பையும் கொண்டே பலன் பெறலாம். அந்தப் பலனின் பலனையும் நாமே, நம் மனம் மகிழப் பெறலாம். பிறர் கையை, ஆதரவை, வழி துணையை, வழிகாட்டுதலை எதிர் பார்த்து; இலவு காத்த கிளியின் கதைபோல் தவிக்கவேண்டிய தில்லை. கைக்காசோ, தரகுக் கூலியோ, சிபார்சு பணமோ செலவு கிடையாது. "இதோ வழி; இந்த வழியைக் கைக்கொள்வதற்கான உபாயம். அதனால் ஏற்படப்போகும் பலனின் கருத்துச் சித்திரம். முயற்சியுங்கள். பாடுபடுங் கள் வெற்றி யுமக்கே. வெற்றிக்குரியவர் நீங்களே. பலன் உங்களுடையதே. பலனுக்குரிவர் நீங் களே. அடையுங்கள். அனுபவியுங்கள். நல்

வாழ்வு வாழுங்கள்; நீங்களும் உங்கள் குடும்பமும் சுற்றமும் நட்பினரும்'' என்றுதான் கருத்துக்களை தேன் பாகமாக வடித்தெடுத்துக் கொடுக்கிறார். தங்குதடைகளிலிருந்தால்; தடுப்பவை; தடுப்பவரிருந்தால் அவற்றையும் சுட்டுகிறார். அந்தக் தடைகளை களைவதற்கான வழிகளையும் கூறுகிறார். நோயையும் கண்டுபிடித்து—நோயின் போக்கையும் கூறி, அதனை நீக்குவதற்கான முறைகளையும் சொல்லி, மருந்தும் கொடுத்து நல்லுதவி புரியும் மருத்துவர் பண்பில் இயம்புகிறார்.

அந்நியர்களின் ஆதிக்கத்தால்—சுரண்டலால்; பத்தாம் பசலி சமுதாய பழக்க வழக்கங்களால்; மதவழி குருட்டு நம்பிக்கைக் கடும் தளைகளால்; நம் தாயகம்—தமிழகம்—திராவிட நாடு இடிபட்டு, அடிமைப்பட்டு, நலிவுற்று தவிக்கின்றது—செல்வமும் சுகமும் இழந்து ஏங்குகின்றது. வாழ்க்கை இன்பத்தை எங்கோ தேடி ஏங்குகின்றது. பாடுபட்டு, கையில் கண்டதையும் பறிகொடுத்துப் பரிதவிக்கின்றது. வளமிக்க முல்லை நெய்தல் நிலம் பாலைவனமானதுபோல், நாட்டு விளைச்சல் வளம் தடுமாறி நிற்கின்றது. போதுமான வருவாயென்ற மழையில்லை. சுகவாழ்வு என்ற விளைச்சலில்லை. விளைநிலமும், விளைவின்பத்திற்கான வழிகளும், வகைகளும் வரண்டு கிடக்கின்றன—வரளச் செய்யப்பட்டுவிட்டன. அடுத்தடுத்து ஊடுருவிய அந்நியர்களின் அரசியல், பொருளாதார சமுதாய. மதத்

துறை ஆதிக்கங்களாலும் அவர் தம் சுயநல சுரண்டல்களாலும் விளைந்தது இது.

பஞ்சமோ பஞ்சம் பட்டினியால் உயிர் துடிதுடிக்கின்றது. சாகவுமின்றி—வாழவுமின்றி தவிக்கின்றனர் மக்கள். இந்தக் கடும் நலிவிலிருந்து மக்களை மீட்கவும் காக்கவும், மீளச் செய்யவும் காத்துக் கொள்ளவும் நல்வழி கூறுவோர்—நன்னெறி காட்டுவோர்—மிக மிக அவசரமாகவும், அவசியமாகவும் தேவைப்படுகின்றது.

பொதுநல மெய் ஊழியர்—பொது நலத் தூய பண்பினர்—நடுநிலைமைக் கருத்தினர்—நல்வழி நன்னெறிச் செம்மல்கள் தேவைப்பட்டு நிற்கும் இந்தக் காலத்தில்; மக்களுக்கு ஆதரவு காட்டி, வழி காட்ட—நலிவு நீக்க—நல்லறிவு ஒளி பருதியாக வந்து வாய்த்துள்ளார், மெய்யறிவுப் புலவர் அண்ணாதுரை.

நன்னெறி மெய்மொழிகளைச் செப்புகிறார்—நல்வழிகளை வகுத்தளிக்கிறார், நல்லறிவு ஊட்டுகிறார்; அறிவொளி தளர்வுற்ற மக்களுக்கு—தமது சொல்வன்மையால், அம்மக்கள் உள்ளம் கவரும் துறையிலும் அம் மக்கள் மனதில் வேர் கொண்டு செழுமை கொள்ளும் முறையிலும்—மெய்யறிவு துலக்கம் பெறவும் தன்மான தன்னுணர்ச்சி வள

ரவும் — தன்னியக்கந் தன்னறிவு பண்பாடும் வகையிலும், நமக்கு பிறர் இழைத்த நலிவை நாமே, தமது அறிவையும் உழைப்பையும் கொண்டு, நீக்கிக் கொண்டு, நல்வாழ்வு பெற ஆக்கத் துறையில் ஊக்க மூட்டுகிருர்.

மற்றும், சாதாரண மனிதரும் உயர்ந்தவரென இவர் தம்மை நினைத்துக்கொள்வதில்லை — சில மேட்டுக்குடி மேதாவிகளைப்போல்.

"தோழர்களே! நானும் உங்கள் தோழன் தான்" என்று சரளமாக உறவாடி, உரையோடு கிருர். ஆடம்பர வாழ்க்கை நடத்தி, அரண்மனை மூலஸ்தானுதிபதியாக — காணக் கிடைக்காத — காணக் கைக்கூலி; காணிக்கை செலுத்த வேண்டிய அளவுக்கு எட்டாத மேட்டுச் சீமான்களின் "கோஷா" முறையைக் கைக்கொள்ளவில்லை இவர். அதற்கு மாருகக் காட்சிக்கு எளியன். எளிதில் யாவரும் நெருங்கிப் பேசிப் பழகி, கருத்தை அறியக் கூடிய சரளப் பண்பினர்.

எளிய தோற்றம் — நடையுடை பாவனைகளிலும், எளிய வாழ்க்கை. ஏழைப் பாட்டாளிகளும் "நம்மவரே" என்று பரிவுடன் சொல்ல — சமத்துவ உறவு கொண்டாடத் தக்கத் துறையினர். ஆயினும் பிறருடைய — பொது மக்களுடைய பரண்ட வாழ்

ணையை வளப்படுத்தும் மேகம் படலம் போன்ற வர்—கைம்மாறு கருதாதவர்.

" விண் நின்று பெய்து விரி நீர் வியன் உலகத்து
உள் நின்று அகற்றும் பசி."

வானத்திலிருந்து பொழிந்து ; மக்களின் பசியை —நலிவை அகற்றுகிறது கார்மேகம். மேடையி னின்றும் சொல்மாரி பொழிந்து மக்களின் நலிவு நீங்க வழி கோலுகிறார் அறிஞர் அண்ணா—கலை மேகம்.

" ..கெட்டார்க்குச் சார்வாய் மற்று ஆங்கே
எடுப்பதுவும்...ஆன மழை "

போன்று, இவர் இயம்பும் கருத்துக்கள் அனைத் தும், வறுமையால் — பொருள் நலிவால்—பயன் பயக்கும் பணியின்மையால் வாடித் தவிக்கும் மக்க ளுக்கு நற்பயன் பயப்பதாய் இருத்தலால்தான் இவருடைய அறிவுரைகளை அம் மக்களும் "அமுதம்"'என்று உணரலாயினர்.

"முயற்சி திருவினை யாக்கும் முயச்சி இன்மை
இன்மை புகுத்திவிடும் "

என்ற மெய்மொழியின் கருத்தை மக்கள் தெளிவுற வுணர்ந்து நடந்து ; பயன் பெறும்படியும் இவர் ஊக்கமளித்து வருகிறார்.

காட்சிக்கு எளியனுகவும், கடுஞ்சொல்ல னல்லனுகவும் இருத்தலாலும் ; வேண்டியாருக்கு வேண்டிய வகையில், வேண்டிய அறிவுரைகளை இவர் அளித்து வருதலாலும்தான், இவரைப் போற்றிப் புகழ்கின்றது உலகம்.

" இவரா, அண்ணுதுரை !—அறிஞர் அண்ணுதுரை ?" என்று உருவத்தைப் பார்த்து அய்யப்பட்டவர்களும் இவருடைய சொற்பொழிவைக் கேட்டதும், "அறிஞர் மாத்திரமா ; பேரறிவாளர் ! கலாநிதி ! அட்சரலட்சம் பெற்றதாகக் கூறுகிருர்களே, பண்டைக்கால புலவர்கள். இலட்சம் என்ன ?. லட்சோப லட்சம் பெறும் இவருடைய அறிவுரைகள் " என்று உள்ளம் பொலிய மனப்பூர்வமாகச் சொல்லிச் சொல்லி மகிழ்ந்து கொண்டே செல்வர்—வீடு சென்றடையும் வரை.

தமிழ் மொழிக்கு— தமிழகத்திற்கு — பொதுப்படையாக திராவிட நாட்டுக்கு, இவரால் சிறப்பும், தன்மான வுணர்ச்சியும் ஏற்பட்டு வருகிறது நாட்டுக்கு—நாட்டின் வளத்திற்கு நாமே கர்த்தா என்ற ஓல்கா மெய்மையை உணர்ந்து நடக்கச் செய்த மேதாவிகளில்—பெரியோர்களில் அறிஞர் அண்ணுதுரையவர்கள் சிறப்புச் சிம்மாசனத்திற்கு உரியவராகிருர்.

இத்தகைய சிறப்புச் சிம்மாசனந்திற்கு இவரை அருகதையாகச் செய்யும் ஒப்பற்ற பண்புகளில்

இவருக்குச் சிறப்பு உரிமையாகவுள்ளது, தலைமைத் தளபதிக்கும், அவர்தம் கட்டளைக்கும், மதிப்பளிப்பது. அக்கட்டளையிலே, வழிகாட்டுதலிலே தவறு கண்டாலும், முதலில் அக் கட்டளைக்குப் பணிந்து கொடுத்து, அதன் வழி சென்று, அவ்வகையே அத்தவறைத் திருத்தும் அறிவும், உரமும், தந்திரமதியும், தூய்மை நோக்கும் கொண்ட வீரவுள்ளச் செம்மல் இவர்.

தலைமைக்கு மூத்த தான்தோன்றித் தகப்பன் சாமிகளுக்கு நல்லறிவூட்டி, நல்வழி படுத்துவதில் இவ்வாருக இவர் வழிகாட்டுகிருர்.

வேறெந்த நாட்டிலும், இத்தகைய தனிச் சிறப்புப் பண்பு படைத்த தளபதிகளை, அரசியல் — சமுதாயத் துறையில் காண்பது அரிதினும் அரிதேயாகும்.

எத்தகு பேரறிஞர்களாயினும், அரசியல் சமுதாய இயல் தலைவர்களாயினும் இவருடைய கருத்துக்களை ஆமோதிக்கும் முறையிலும், தந்திரமாக நகைச்சுவைத் துறையில் அவர்களுக்கு பணிந்து கொடுப்பதுபோல் போக்குக்காட்டித் தன் கோட்பாடுகளை இறுதியில் சாதித்துக் கொள்வதிலும் வல்லுநர்.

பிற தலைவர்களுடன் கொள்கை மாறுபடின், ஒதுங்கி நின்று, தன் 'கூற்றை மெய்ப்பிக்கத்தனித்

துப் பாடுபடுவாரே யன்றி, அக்குழுவின் உள்ளுக்குள் ஒட்டி நின்று, புல்லுருவி நாடகம் நடத்த ஒருப்படார்.

சிறப்பும் செல்வாக்கும் பொருமையைக் கிளறிவிடும் மாயப் பண்புகள். சிறப்பும் செல்வாக்கும் பெற்றவர், பணம் குவித்த கருமியினும் பல மடங்கு அதிகம் சுயநலமும், பொருமையும் கொள்வது உலகறிவு. பிறர் தன்னைப் போல் செல்வாக்கு பெறுவதைத் தடுப்போரும், போட்டியாளர்களை எவ்வகையினும் இழிவு படுத்தி மட்டம் தட்டுவோரும் இலக்கிய இயலிலும் முக்கியமாக அரசியலிலும் அதிகம். இந்தப் பொருமைச் சுயநலப் பண்புக்கு இலக்காகாதவர் மிகமிக சொற்பம். இந்த சொற்பத்தில் தனி மணியாக விளங்குபவர் கலைச்செல்வர்-அரசியல் அண்ணல் அறிஞர் அண்ணாதுரை. சிறப்பையும் செல்வாக்கையும் பொதுமையாக்குதல் இவருக்குப் பொதுச் சிறப்புப் பண்பு. தன்னை அண்டியோர், சிறியோர், பெரியோர் படித்தோர், படியாதார் என்ற வேற்றுமையின்றி எல்லோருக்கும் இயன்ற அளவு புகழேணியிலே ஏற வழிகாட்டுவார் —கைகொடுத்தும் தூக்கிவிடுவார் சிலரை.

இது தலைமைப் பதவிக்கு ஆபத்தாயிற்றே என்று உலகறிந்த சிலர் வினவலாம். உண்மைதான். ஆயினும் இத்துறையில் இவர் உள்ளக் கிடக்கை பெரும் புதிராக வுள்ளதே! எத்துறையில் இவர்

தலைமை கொள்ள விரும்புகிறார் என்பதே இதுவரை யாருக்கும் தெளிவு பட்டதாகக் காணோம். ஆனால் ஒன்று மாத்திரம் சொல்லலாம். அதாவது இவர் ஓர் ஆற்றுக்கால் ஊற்று—கலைத் துறையிலும் சமுதாய சீர்திருத்தத் துறையிலும். ஆற்று மணலில், எக்காலத்தும் எங்கு பறித்தாலும் தண்ணீர் கிடைக்கும்; அதுவேபோல், இவருடைய அறிவும் எக்காலத்திலும் எத்துறையிலும் மலரக் கூடிய விசித்திர பண்பு படைத்துள்ளது. இத்தகையோருக்கு எது தோல்வி-எது வெற்றி என்று நிர்ணயிக்க வியலாது. திட்டவட்டமாக கூறுமிடத்து இத்தகையோருக்குத் தோல்வி என்பதே கிடையாது. தோல்வி என்று பிறர் எதனைக் குறிப்பிடுகின்றனரோ அதே இவரகளுக்கு மாபெரும் வெற்றி முன்னேற்ற ஏணியாகிறது. எதிர்ப்பு, இவர்களை சிறப்பு மலை யுச்சியை எளிதில் அடையச் செய்கிறது. என்றென்றும் மறையாத சிறப்புக்குரிய மேதாவிகள், மகான்கள், சீர்த்திருத்த வாதிகள் ஆகியவர்களின் சிறப்பு இலக்கணம் இதுவே யாகும்.

இந்தக் கலைத்துறை சமுதாயத்துறை சீர்திருத்தப் பணிக்கு இவருக்கு உறுதுணையாக இருந்து வருவது யார்? யாவை? பிறரோ பிறர் உதவியோ அல்ல. இவருக்கு உறுதுணையாகியதெல்லாம் இவருடைய உள்ளமே யாகும்.

"அஞ்சாமை யல்லால் துணை வேண்டாம்
எண்ணி இடத்துச் செயின்" [எஞ்சாமை

என்ற பொய்யாமொழியின்படி, இவர் உரியச் செயலை உரிய இடத்தில் செய்கிறார். இவருடைய உள்ள உறமும் துணிவும் அஞ்சாமையும் அன்றி வேறு துணை வேண்டியதில்லை உவருக்கு.

அறிவுடையார் எல்லாம் உடையார்" என்பது அனுபவ மொழியன்றோ.

# சொல் சோர்வு இல்லார்

ராமாயண பக்த கோடிகள் — கம்பதாசர்கள் நிரம்பிய கூட்டம் — புலவர்கள் — இலக்கிய இலக்கணங்கள் தண்ணீர் பட்டபாடு அவர்களுக்கு. அரசியல் எதிர் கட்சியாளர் ; பகையுணர்ச்சி பொங்க, பழிவாங்கும் எண்ணம் புகையக் குவிந்துள்ள பேரவை — ஜரிகை தலைப்பாகைகள், ஆயிரம் ரூபாய் ஆடை சிங்காரச் சீமான்கள்— பாரக்குக் கும்பல் நிரை சூழ்ந்த மதத் தலைவர்கள் — பண்டார கனங்கள் — அதிகாரவர்க்கத்தினர், அவர்தம் ஆதரவு பெற்ற அரசியல் தூண்கள், காவல் படை ஊடுருவி நின்றும் ஒற்றுடும் கோட்டம் ; யாதாகத்தானிருக்கட்டுமே ; திகைப்பும் தயக்கமும் உள்ளத்தடுமாற்றமும் கருத்துக் குழப்பமும் சொற் சோர்வும், தன் கோட்பாடை விட்டுக் கொடுக்கும் மனத்தளர்வும் ஏற்படுமா இவருக்கு ?

பட்டதாரிகளாகட்டும், பட்டைதாரிகளாகட்டும் மணி கட்டிய பக்தர்களாகட்டும், ராமாயண,, பாரத புலவர்களாகட்டும், புராணப் பிரசங்கிகளாகட்டும், பாட்டாளிகளாகட்டும், மாணவர்களாகட்டும் ; 'எல்லோரும் மக்கள் — எல்லோரும் இந்

நாட்டுக் குடிகள் ; எல்லோரும் இந்நாட்டு மன்னர் — எல்லோருக்கும் நல்வாழ்வு வாழ, எல்லாவுரிமைகளுமுண்டு' என்ற பான்மையில்தான் இவருடைய பேச்சும் கருத்தும் சொற்பொழிவுகளும் உரையாடல்களுமிருக்கும் — வானின்று பொழியும் ; வேற்றுமை கொள்ளா மழைத் தாரைகளைப்போல்.

சீமான்களின் சிறப்புக் கூட்டமே என்று அடங்கி ஒடுங்கி, இவரது கருத்துக்கள் முக்காடிட்டுக் கொள்ளா. பரந்தாமனின் பக்தர் குழாமே என்று, குருட்டுக் கொள்கைகளை இருட்டறையைத் தழுவும்படி விட்டுவைத்து விடமாட்டார்.

மெய்மை — மெய்மை ; கையுதவி சம்பிரதாயங்கள் — கைமேல் பலன் ; யாவர்க்கும் நல்வாழ்வு — நல்லறிவு ; இவைகளே இவருடைய குறிக்கோள். இக்குறிக்கோளை அடைய மக்களைஊக்குவிக்கும் துறையில் ; இவர் எவரைக் கண்டும், எதனைக் கண்டும் தயங்க மாட்டார் — மரியாதைப் பதுக்கமும் கொள்ள மாட்டார்.

மற்றொரு தனியுரிமை சிறப்புப் பண்பும் இவர் பாலுண்டு. எதிரிகளைத் தாக்கிப் பேசிப் பதறச் செய்து, தலை கவிழச் செய்வரே, சில, வாய்வீர சிகாமணிகள் — வாய் சொல் வீரர்கள் — கொச்சை மொழிகளிலே — நச்சு நோக்கத்துடன். அந்த நச்சுப் பண்பு இவர்

பக்கலும் அண்டுவதில்லை. எதிர் கட்சியார் — எதிர் கொள்கையினர் கூட்டமாயினும் சரியே தம் கட்சிக் கூட்டத்திற்கு எதிரிகள் வந்திருந் தாலும் சரியே, மாற்றுக் கொள்கை அறிஞ ரொருவர் தலைமையில் பேச வேண்டிய அரங் காயினும் சரியே, அந்த எதிர் கொள்கையி னரும், அந்த எதிர் கோட்பாட்டு அறிஞர் களும் மனம் கோணாதபடி; மனம் நோகாத படி — மனதில் சுடாதபடி — அவர்களுக்கு அவ மானம் நேரிடாதபடி பேசுவார். சிரிக்கச் சிரிக்கப் பேசி — அவர்களையும் சிரிக்க வைத்து அவர்களு டைய மனத்தைக் கவர்கிற எதிர் குழுவினர் கொள்கைகளின் தீப்புலனை, தேன் கனிய நகைச்சுவை மொழிகளிலே சிலேடைத் துறை களிலே எடுத்துக் காட்டியவர் — குளோரொபாம் என்ற மயக்க மருந்து கொடுத்து அறுவைச் சிகிச்சை செய்ததுபோல். அத் தீங்குகளைக் களையச் செய்வார். மாற்றுக் கொள்கையின ரும் பாராட்டி, மனப்பூர்வமாக இவருடைய கருத்தை — நியாய வாதத்தை ஆமோதிக்கச் செய்து விடுவார். இவர் மாத்திரமா இந்த முறையில் நடப்பார்? சபையோரும் — கூட்டத் தினரும் கூட அந்த மாற்றுக் கட்சியினர் — கொள்கையினர் மனம் நோகும்படி, எக்கச் சக்கமாக நடந்து கொள்ளவும் இடம் விடமாட் டார்.

“ மகா பக்தர் இவர். இவருடைய கொள் கையும் பேச்சும் மக்களைப் பித்தராக்கிவிடும்.

பித்தராஞேர் வாழ்க்கையின் கோரம் என்ன வாகும் என்பது உலகறிந்ததுதானே."

என்ற பாணியில் தானிருக்கும் இந்த பகுத் தறிவு — உலகறிவு — சபையறிவு செம்மல்; எதிரி களின் கொள்கைகளை மட்டம் தட்டும் போக்கு.

இத்தகையாரைத்தான் சிறப்பித்துக் கூறுகிறது. திருக்குறளும்,

"சொலல் வல்லான் சோர்விலான் அஞ்சான்
இகல் வெல்லல் யார்க்கும் அரிது" [அவனை

—என்று

சொல்லிலே — சொல்லாடுதலிலே — வர்ரதத் திலே — இவர் நிகரற்று விளங்குகிருர். யாரைக் கண்டும் எதனைக் கண்டும் இவர் சொற் சோர்வு படுவதில்லை; யாருடனும், எக்கொள் கையினருடனும், கட்சியினருடனும் அஞ்சாது வாது நடத்துவார். பகைப் புலனுடன் வந்த வர்களுடனும் தோழமைப் பண்பு துளிர்க்க உரையாடுவார். எனவேதான் இவரை இகல் — எதிரிகள் — எதிர் கொள்கையினர்; எதிர் கட்சியினர், சொற்போரிலே வெல்வது அரிதா கிறது.

இவருடைய சொற்பொழிவுகளுக்கு மற்றுமோர் தனிச் சிறப்புள்ளது—

"கேட்டார் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவாதம் சொல்"

அதாவது இவர் சொற்பொழிவை கேட்பவர்களின் பிணி — மனக்குறைகள் — குறைபாடுகள் — கவலைகள் – துயரங்கள் – இழிவுகள் தாழ்வுகள் ஆகியவைகளை நீக்கக் கூடிய மருந்து போன்றது இவருடைய சொல் — அறிவுரைகள் — ஆய்வு மொழிகள் அதே சமயத்தில் இவரது சொற்பொழிவைக் கேட்காதவர்களும் – "சே. இவர் எதிராளியாயிற்றே. இவர் சொல்வதை பேசுவதைக் கேட்கலாமா ? நம் கோட்பாடுகளுக்கு மாறாகவும் நடைமுறைகளுக்கு விரோதமாகவுமல்லவா பேசி வைப்பார்" என்று கருதி ; இவருடைய சொற்பொழிவுகளைக் கேட்கலாகாது என்று எண்ணமிட்டுக் கொண்டிருப்பவர்களும் ; எதிர் பாராதவிதமாக, இவர் பேசும் இடத்தை அடைய நேரிட்டு, இவருடைய சொற்பொழிவை ஒரு தரம் கேட்க நேரிட்டு விட்டால் போதும் — கவர்ந்துவிடும் அவர்களுடைய நெஞ்சை, இவருடைய கருத்துரைகள். முதலில் சில காலம் தலை மறைவாக ஒதுங்கி நின்று கேட்பர், பின் கும்பலுடன் கும்பலாக நின்று கேட்பர். அதன் பிறகு வெளிப்படையாக அணுகிக் கேட்பர் — விருப்

புத்தோடு. எதிர் கட்சியினர் — கோட்பாட்டினர் உள்ளத்திலும் இத்தகைய விருப்பத்தை ஊட்டும் கவர்ச்சிச் சக்தியில் ஈடற்று விளங்குகின்றன இந்த அறிஞரின் சொற்பொழிவுகள்.

## வீரமில்லையா தமிழில் !

கோவை மாநகரிலே, தமிழ் எழுத்தாளர் மாநாடு, (தினசரி ஆசிரியர் திரு. டி. எஸ். சொக்கலிங்கம் அவர்கள் தலைமையில் என்று எண்ணுகிறேன்) இந்த மாநாட்டிலே பேசியவர்கள் — தமிழ் எழுத்தாளர்கள் ; தமிழ் மொழியிலே வீரவுணர்ச்சியைக் காட்டவியலவில்லை என்று குறைப்பட்டுக் கொண்டார்கள். பரணிகள் முழங்கும் தமிழ் மொழியிலே வீர மில்லையாம் ! இந்தக் குறை கூறலைக் கேட்டுத் துள்ளி எழுந்தார், எழுத்தாளர்களில் பழம்புலியான திரு. வ. ரா.

"வீரமா இல்லை தமிழிலே ; பரணித் தமிழிலே ? இப்போதும் காணுங்கள் கண்கூடாக, இந்த வீரம் — வீர அமைப்பு — வீரவுணர்ச்சியை; தமிழ் மொழியிலே எடுத்துக் காட்டும் பாணியை. படித்துப் பாருங்கள் திரு. அண்ணாதுரையின் கட்டுரைகளை — கதைகளை — அவரை ஆசிரியராகக் கொண்ட, வாரத்தாளான " திராவிட

நாட்டை", என்று வீரவுணர்ச்சியோடு சொல்லிக் காட்டி, குறை கூறியோர்களுக்கும், குறைபட்டோருக்கும் அறிவுரை புகன்றார்.

எழுத்தாளர்கள் குறை பட்டுக் கொண்டதற்கு உடனடிக் காரணமில்லாமல் போகவில்லை. எப்படியெனில், பரணி முழங்கிய பாவலர்கள் காலம் கடந்து பல நூற்றாண்டுகளாகிவிட்டன. அன்னியர் ஆட்சி ஆதிக்கத்தாலே, வீரவுணர்ச்சித் தளர்வுற்றது—செயலிலும் சொல்லும் எழுத்திலும், சொந்தக் கற்பனை நூல்கள்—புதுமைக் கதைகள்—பாவினங்கள் தேன்றவில்லை—தோன்ற வழி விடப்படவில்லை.

அயல் மொழி, அயல் பண்பு நூல்களை தமிழில் மொழி பெயர்த்து விளம்பரப் படுத்துவதில் எழுத்தாளர்களின் கருத்துப் பாய்ந்தது. வெறும் கட்டுக் கதைகள், காதல் சித்திரங்கள், பொழுது போக்கு நகைச்சுவை கட்டுரைகள், இவைகளே மொழி பெயர்ப்பு உருவத்தில் தென்பட்டு வந்தன. அந்த மொழி பெயர்ப்புகளிலும் அந்நிய மொழி வாக்கியங்களை, அச்சுக்கோர்வையாக அப்படியே மொழி பெயர்த்துத் தள்ளினர்: மூட்டை ரயில் தொடர் போன்றிருக்கும் இந்த "நாவல்" தமிழ் நடை. தனித்தமிழ்த்துறை நடை மறைவு பட்டது. பரணித் தமிழ், பழங்கால ஓலைச்சுவடிகளிலும், புத்தகசாலைகளிலுள்ள புத்தகத்தாள்களிலுமே இடம் பெற்றிருந்தன.

பண்டைப் பரணி நடையில் எழுதுவாரில்லை. எழுதும் பயிற்சியும் இல்லாததாயிற்று. மற்றும் எழுதுவோருக்கு மாத்திரமின்றி, படிப்போரான பொது மக்களுக்கும் வீரவுணர்ச்சி மங்கிக் கிடந்தது.

எனவே தான் எழுத்தாளர்கள்—பத்திரிகாசிரியர்கள் என்பவர்களும் கூட வீரத்தமிழை அறிந்து கொள்ளாது — குறைப்பட்டுக்கொள்ள வேண்டிய நிலவரம் ஏற்பட்டுவிட்டது. இந்த வீரமில்லாக் குறையை தீர்க்க வந்தார், எழுத்தோவிய அறிஞர் அண்ணாத்துரை. சாதாரண நடையில் எழுதப்படும் தினத்தாள்களிலும் வீர நடையைப் புகுத்தி; தமிழ் நடையிலே, ஒரு புரட்சியை — புதுமையைத் தோற்றுவித்தார். வ. ரா. போன்ற பத்திரிகாசியர்களின் மனதைக் கவர்ந்தார்—பாராட்டு தலைப் பெற்றார். தமிழுக்கோர் தனி நடை அமைத்தார்.

இதற்கு "அண்ணாதுரை நடை என்று தமிழ் மக்களும் சிறப்புப் பெயர் தந்து அழைத்து வருகின்றனர்.

இவருடைய தமிழ்மொழிப் புதுமைப் பணி, பத்திரிகைகள்— 'நூல்கள்— சொற்பொழிவுகளுடன் நின்றுவிடவில்லை.

எழுத்திலும் சொல்லிலும் தோற்றுவிக்கும் கருத்து உருவங்களுக்கும் ஊயிரூட்டுவதும், அந்த

'உயிர் உடல்'' மக்கள் மனதில் இடம் பெறவும்; அக்கருத்துக்களில்—நல்லன—பயன் பயப்பனவான வற்றை மக்கள் கைக் கொண்டு நடக்கவும் செய்வதில் தலை சிறந்த துறையான நாடக இயலிலும்! இவர் புதுமையைப் புகுத்துவித்தார் —ஆங்கில மொழியிலே பேரறிஞர் பெர்னுட் ஷாவைப் போன்று.

இப்புதுமை நடையை இவர் புகுத்துவதற்கு முன், தமிழ் இலக்கிய உலகம் எவ்வாறிருந்தது? இதோ அவரே படம் பிடித்துக் காட்டுகிருர் க. மா. மோகினி—அல்லது இன்ப வாழ்வு என்ற எனது நாடக நூலுக்கு எழுதிய சிறப்பு உரையில்—"புது வண்ணம்'' என்று புதுமைத் தலைப்பளித்து.

"செல்வம் இங்கிருக்க, செப்போட்டைத் தேடித் திரிந்து வந்தோமே!—செந்நெல் இங் கிருக்கப் பதரினைக் குவித்துக்கொண்டிருந்தோமே —சந்தனத்தைத் தேடி சேற்றிலே உழன்று கொண்டிருந்தோமே, காகம் கரைவதைக் கேட் டுக் கொண்டிருந்துவிட்டோம் குயிலோசையைக் கேளாமல்''

என்று மனம் குமுறுகிருர். தமிழக மக்கள் பண்டைப் பெரும் அறிவுக் கருவூலங்களான நூல்களை மறந்தும்—அறிவுக் கண் திறந்தும் பாராதும், அயலார்—அயல் மொழி நூல்களிலே

கருத்துப் பாய்ச்சி நின்ற நிலைமையைத்தான் இவர் இவ்விதம் சுட்டிக் காட்டுகிறார்.

அக்காலத்து தமிழ் மக்களின் கருத்திலும் கண்ணிலும் பட்டு நின்ற நூல்கள் யாவை ? விவரிக்கிறார் அறிஞர் அண்ணா அவர்களே மேற்படி சிறப்புரையில் :

"ராம காதை, எத்தனை உருவங்கள் பெற்றுளது ?— எவ்வளவு வண்ணங்கள் ? அந்த வேலை இன்றும் நடைபெறுகிறது. சித்திர ராமாயணம்--சிறு கதை ராமாயணம்--தெந்தினத்தில் ராமாயணம்--கூத்துவடிவில் ராமாயணம் இப்படிப் பலப் பல. கதையும் கருத்தும் ஒன்று தான்--வடிவங்களோ பல. புராணக் கதைக்கு இத்தகு வடிவங்கள் பல தருவது காண்கிறோம் "

தமிழ் இலக்கிய--உரை நடை நூல்களும் --கவிதைகளும் இவ்விதம்தான் புராணக் கதைப் பிரசாரத் துறைகளை மாத்திரம் கொண்டிருந்தன. இவற்றை தழுவியே தமிழ் நாடக உலகும் இருந்து வந்தது-- நாடகம் என்றால் ராமாயணம் பாரதம் என்று கூறுமளவுக்கு.

இந்த ஈரைந்தாண்டுகளில்--இந்த அறிஞர் உரை நடையில் செய்வித்த புதுமை போன்றே நாடக வியலையும் புதுமையாக்கியதன் பலனாக இப்போது, தமிழ் நாடக இயல், மக்கள் காலத்துக்

கேற்ற—மக்களுக்கான மக்களின் சொத்தாக்கப் பட்டுவிட்டது.

பண்டைப் புராண நாடகங்கள் பழங் கதைகளாகி விட்டன. நடப்புக் காலத்தைத் தழுவிய சீர்திருத்த நாடகங்களே இப்போது மக்கள் முன் காட்சியளித்து வருகின்றன. மக்களின் கருத்துக்கும் விருப்புக்கும் ஏற்றதும், எளிதில் புரிந்து கொண்டு நற்பயன் பெறக் கூடியதுமான காட்சிகளே-- கதைகளே இப் போது நாடகவுலகில் இடம் பெற்று வருகின் றன. இப்புதுமைப் புரட்சி ஏற்படச் செய்த பெருமைக்குத் தனியுரிமையாளர் கலைச் செல்வர் அண்ணாதுரையே யாவர்.

'அறிவுடையார் எல்லாம் உடையார்-அறிவிலார்
என்னுடை யரேனும் இலர்''

## மெய்ப்புலவர்

கலை கற்பனையிலே உற்பத்தியாவது. கற்பனை ஊற்று, இளமையிலே உற்பத்தியாவது. இள மைப் பருவத்திலே ஏற்படும் இக்கற்பனையூற்றை செப்பனிட்டு, கிணறு அமைத்துக்கொண்டால், பிற்காலத்தில் இது வற்றா ஊற்றுக் கிணறாக இருந்து வரும். நாற்பது வயதுக்கு முன்தான் இந்தக் கற்பனை ஊற்று அதிக வேகமும் பொலிவும் கொண்டிருக்கும். நாற்பதன் பின் அநுபவச் சித்திரங்களே மிதந்து நிற்கும்.

அகராதியாகவோ, நிகண்டாகவோ மாத்திரம் இருப்பது அல்லவே கலையின்--நூலின் குறிக்கோள். பெரும் பாலோராக விருக்கும் பொதுவுலகினருக்கும் விருப்பும் பயனும் ஏற்படச் செய்வது தான் மெய்க்கலை. அறிவின் வளம் பயனில் தான் தெரியும். மேனாட்டுக் கலைஞர் அய். ஏ. ரிச்சார்ட்சன் என்பவர், தாம் எழுதியுள்ள "நூல் நய நுணுக்கங்கள்" என்ற நூலில் மெய்க்கலையும் நூலும்--கவியும் எவை என்பது பற்றி கீழ்க் கண்படி கருத்துத் தெரிவிககிறார் :--

" பாவின உலகம் மற்ற பொது வுலக மெய்மையினின்றும் எவ்வகையிலும் மாறுபட்டதன்று. கவிகளுக்குத் தனிப்பட்ட சட்ட திட்ட விதிகளோ, தனிப்பட்ட பண்புகளோ கிடையா. மற்ற துறைகளில் நமக்கு எவ்வகை அனுபவங்கள் ஏற்படுகின்றனவோ, அதே போன்ற அனுபவங்களைக் கொண்டுதான் கவிகளும் காவியங்களும் அமைக்கப்படுகின்றன. ஒவ்வொரு பாவும் அதனைத் தொகுத்த கவிஞரின் அனுபவ சித்திரமேயாகும். உலகில் தான் கண்ட தகாப் பண்புகளையும் தகும் பண்புகளையும் சீர்தூக்கி விளக்கிக் காட்டி, நல்லதைச் சுட்டி காட்டுவான் மெய்ப் புலவன். பாவியலை சொந்த அனுபவங்களிலிருந்து பிரித்து, வெறும் கற்பனைக்கோப்பாக்கிவிடுவது, உலகிற்கு பயன் படா கட்டுக்கோப்பேயாகும். அது குறுகிய பான்மையின் விளைவு என்பதுடன் மக்களி

டையே தன்னியக்க மற்றதும் குறுகியதுமான மனப்பான்மையைத்தான் உண்டாக்கும்.”

இதிலிருந்து, உலகத்தோடு ஒட்ட ஒழுகவும், நடப்புக்கும் நற்பலன் பயப்பனவும்தான் மெய்க் கலையும்—மெய்நூலும் என்பது புலனாகிறது. ஆறு பாயுமிடத்தில்தான் கோயில் கட்டப்படுகிறது. கோயிலுள்ள இடம் நோக்கி ஆறு பாய்ந்து வருவதில்லை. இயற்கை நடப்புக்கு ஏற்ற கலைகளைத்தான் மக்களும் விரும்புவரே யன்றி, வெறும் கற்பனைகளை விரும்பார். இவ்விதம், உலகிற்குக் கைமேல் பலன்தரும் எழுத்தோவியங்களைச் சித்தரித்துப் புரட்சிப் புலவர்களில் தலை சிறந்தவர் அறிஞர் பெர்னாட்ஷா. “அறிஞர் பெர்னாட்ஷாக்கள் தமிழகத்திலுமுண்டு” என்று போற்றக்கூடிய சிறப்புப் பெற்றுள்ளவர் அறிஞர் அண்ணாதுரையவர்கள்.

எழுத்தறிவும், கலையறிவும் ஒருவகை பித்த நோயின் விளைவு என்றுதான் கூறவேண்டியிருக்கிறது. அறிவின் அசாதாரண கற்பனை ஓட்டம் இந்தப் பித்த நோயால் ஏற்படுகிறது. எழுத்தாளர்கள்—கலைஞர்கள் ஆகியவர்களின் தன்மையும் போக்கும் ஒரு பித்த நோயாளியின் போக்கைப் போன்றுதானிருக்கின்றன. வயிற்றிலுள்ள, தாகப் பொருள்களை வாந்தி எடுக்கச் செய்கிறது பித்த நோய். சமுதாயத்திலுள்ள தாகப் புண்புகளை வெளிப்படுத்தச் செய்கிறது புலவரின்

கலைநோய். அன்றாடம் புதுமையை நாடித் தாவிய படியுள்ளது கலைஞனின் உள்ளம். எனவே இவனுடைய பாய்ச்சலுடன் போட்டி போடவியலாத உலகம், இவனைப் பித்தனென எண்ணுகிறது. ஆயினும் இத் தலைமுறைக் கலைஞனின் கற்பனை மெய்மைகளும் நெறிகளும் அடுத்த தலைமுறைக் காவது ஏற்புடையனவாகவும் பயன் பயப்பனவாக வும் ஆகித்தான் தீரும்.

புரட்சிப் புலவர்கள் தரும் புதுமைகள் அதி மதுரப்பட்டையைப் போன்றது. முதலில் கசக்க லாம் ; சுவைக்கச் சுவைக்கத்தானினிக்கும். அதி மதுரப்பட்டை சுரத்தைத் தணிப்பதுபோல் இந்த புரட்சிக் கருத்துக்களும் சமுதாயத்திலுள்ள கேடு களையும் குறைகளையும் நீக்கும்.

செயற்கரிய செய்வர் பெரியர் — சிறியர்
செயற்கரிய செய்கலாதார்.

கலைஞனின் கண்டுபிடிப்புகள் பிற்காலத்த வர்களுக்கு, சிறந்த அறிவுக் களஞ்சியமாகவும் நீரூற்றாகவும் பயன்படும். சிறந்த பேரருள் சிங் காரிப்பில் ஏற்படாது. பிறப்பிலும் வளர்ப்பிலும் பயனிலும் சிறப்புப் பொலிவு கொண்டிருக்க வேண்டும். உயர்வு மனப்பான்மை உயத்துகிறது. தாழ்வு மனப்பான்மை தாழ்த்துகிறது. கலைஞர் கள் எப்போதும் உயர்வு மனப்பான்மை கொண் டிருப்பவர்கள் எனவே, எவ்வகையிலும், எப்

போதாயினும் சிறப்புக்கு உரிமையாளராகித்தான் தீருவர். மெய்யறிஞர்களின் அறிவாற்றலை அறிந்தவர்களுக்கே, அவர்கள்பால் மதிப்பும் அன்பும் ஏற்படும். அவர்களுடைய அறிவின் சிறப்பை அறிந்துகொள்ள ஆற்றலற்றவர்களுக்கே அறிஞர்கள் பித்தராகக் காணப்படுவர்.

நோய் செயற்கையாலேற்படும் இயற்கைக் கோளாறு. அதாவது வாழ்க்கைத் துறைக் கோளாறுகளால் ஏற்படுவது. மருந்துகளைவிட வாழ்க்கைத் துறையை செப்பனிட்டுக் கொள்வதே பாதுகாப்பும் நிரந்தரமுமான பலன் தரும். இக் கலைமணி செய்துவரும் சமுதாய சீர்த்திருத்தக் கலைப்பணியும்; சமுதாயத்தை நலிவித்து நிற்கும் குறைபாடுகளை நீக்கும் இயற்கை மருத்துவமேயாகும்.

மேட்டுக் குடிகளின் தீண்டாமையும், ஏழைகளுக்கு விளைக்கப்பட்டுள்ள எட்டாமையும்தான், சமுதாய வியல், பொருளியல் பொது நலிவுக்கு உடனடிக் காரணங்களாகும். ஈவிரக்கமற்ற பணக்காரன், ஒரு விபசாரியைவிட பல மடங்கு அதிக சமுதாய விரோதியாவான். உலகம் அன்புக்கு அல்ல—ஆனால் வம்புக்கு; நேர்மைக்கல்ல—ஆனால் போராட்டத்திற்கு. இத்தகைய, சமுதாய முன்னேற்றப் போராட்டத்திற்கு மக்களை வளம்படுத்தி உரமூட்டுபவர் இப்புதுமைக் கலைச்செல்வர்.

இத்தகைய மெய்க் கலைஞர்கள், உள்ளத்திலே, ஆட்சிக்கோலுக்கோ, சமுதாயக் கட்டுப்பாடுகளுக்கோ, மத ஆணைகளுக்கோ அச்சம் ஏற்படாது. கலைஞரின் உள்ளம் குழந்தையுள்ளம். தங்கள் மனம் ஆய்ந்து கண்ட தெளிந்த நற்கருத்துக்களை தங்கு தடையின்றி வெளியிடத்தான் செய்வர். இக் கருத்துக்கள் இப்போதைக்கு இல்லாவிட்டாலும் பிற்காலத்திலாயினும் நற்பயனளித்துத்தான் தீரும் என்பது உறுதி. என்வேதான் அமெரிக்க கலைஞர் தாமஸ் ஜெப்பர்சன் என்பவரும் " கலைக்கும் அறிவுக்கும், படிப்புக்கும் சுதந்திரம் அளிக்கப்படவேண்டும் " என்று வற்புறுத்துகிறார் படிப்பு படிப்பதற்காக மாத்திரமன்று. சமுதாயம் வளம் பெற்று, முன்னேற்ற மடையவும் கையுதவியாக இருக்கவேண்டும். இதுவே மெய்யறிஞர்களின் கருத்தும் குறிக்கோளுமாகும். சமுதாய நலனுக்கும் முன்னேற்றத்துக்குமான கருத்துக்களை வெளியிடுபவர்கள் அறிஞர் அண்ணா போன்ற புரட்சிப் புலவர்களேயாவர். இவர் வெறும் ஏட்டுப் புலவரன்று, சமுதாய, அரசியல் துறைகளிலும் சீர்திருத்தக் கருத்துக்கள் கொண்டு பணியாற்றி வருவதால் சாதாரணமான பள்ளிப் புலவர்களைவிட பல்லாயிரம் பங்கு இவருடைய பணி பயன் பயப்பதாகும்.

சமுதாயப் பொதுநலனைக் குறிக்கோளாகக் கொண்ட மெய்யறிஞர்களுக்கு உள்ளத்தின் உரமும்

துணிச்சலும் அதிகம். உள்ள உரத்திற்கும் துணிச்சலுக்கும் காரணம் அவர்கள் உள்ளம் தூய்மை பெற்றிருப்பதேயாகும்.

இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு.

என்பது நாயனுர் நவிலும் மெய்மை. தெளிவானதும் குற்றமற்றதுமான அறிவினை யுடையவர்க்கு துன்பம் நீங்கி இன்பம் பயக்கும். இந்த நம்பிக்கையும் அவர்கள் துணிச்சலுக்கு உரமாகும். மற்றும் கல்வி, அறிவு என்பது வெறும் சோற்றுப் பாடமல்ல. ஓர் போர் வீரனுக்கும், நாட்டுப் பற்றுளனுக்கும் எத்தகைய நாட்டுப் பற்றும், நாட்டின் கவுரவத்திற்கும் உயிரையும் தியாகம் செய்யும் துணிவும் உண்டாகிறதோ, அதேபோல் மாணவர்களின் உள்ளத்தில் நாட்டுப் பொதுநலப்பற்றை வளரச் செய்வதே மெய்யறிவுக் கல்வியாகும். இத்தகைய கல்வியை அளிப்பவரும் இத்தகு அறிஞர்களேயாவர்—புதுமைக் கருத்துப் புலவர்களே யாவர். பழைமைக்கு மெருகளித்து சிங்காரித்துக் காட்டும் தொல்காப்பியப் புலவர்கள் மக்களை பிற்போக்கில் வீழ்த்து பவர்களே யாவர். உலக மாறுதல்களுக்கும், புதுமைக் கண்டு பிடிப்புகளுக்கும் ஏற்ப படிப்பறிவும் புதுமைக் கொள்ள, வேண்டுமேயன்றி மந்திரத்திலே மாங்காய் ஓட்டச் செய்த பாரத கற்பனை நாட்டுக்கு நல்வழி காட்டிவிடாது

விரலை குரு காணிக்கையாகக் கொடுத்துவிட்டு தவிக்கும் கலைஞர்கள், உண்மையில் "கலைக் கொலைஞர்கள்" என்றுதான் இப்போது கொள்ளப் படுவர். இத்தகைய தகாப் பண்புகளை படிப் பரங்கம் மறுக்கத்தான் வேண்டும். பயனற்ற அறிவும் வாழ்க்கையும் உயிரற்ற உடலுக்கு சம மாகும்.

சென்னை பச்சையப்பன் கல்லூரி தமிழ்த் துறைத் தலைவரான அறிஞர்மணி மு. வரதராச ஞரவர்களும், மெய்ப்புலவர்கள்—நலிவுற்ற மக்களை தலை தூக்கச் செய்யும் புரட்சிப் புலவர்களின் இலக்கணத்தை, புரட்சிக் கவிஞரின் பாடலி லிருந்து கீழ்க்கண்டவாறு படம் பிடித்துக் காட்டு கிறார்: —

"உலகம் பொல்லாதது என்று கவி ஞர் சோர்வதில்லை. உலகத்தில் நடைபெறு கின்ற நிகழ்ச்சிகளைக் கண்டு நம்பிக்கையே கொள்கின்றார். செல்வர் என்று சிலரும் வறிஞர் என்ற பலரும் வாழும் வாழ்வு பழங்கதையாக மாறிவிடப் போகின்றது என்று தெளிகின்றார். சிலருக்கு மட்டும் நல்வாழ்வு நல்கும் அந்தப் பழைய முறை அழியப் போகின்றது. அழிந்து வருகின் றது என்று உணர்த்துகின்றார்."

அமெரிக்கப் புரட்சிக் கவிஞர் வால்ட் விட்மன் "மெய்ப் புலவர் யார்?" என்று விளக்குகிறார். அவருடைய ஆங்கிலக் கருத்துக்களை அறிஞர் அண்ணாவே தமிழாக்கம் செய்து தந்துள்ளார். அதாவது:—

பழைய கட்டுப்பாடுகளையும் முட்டுப்பாடுகளையும் உடைத்தெறிந்து, கவிதைகளுக்கும் வசனத்திற்கும் புதிய சுதந்திர ஓட்டம் தருகிறேன். ஆசான் எனினும் பாரேன், அவன் எழுதிய வழக்கமான கருத்துக்களைத் தகர்த்தெறிவேன். உள்ளத்தை வெளிப்படையாக—சீர்தளைகளுக்குக் கட்டுப் படாமல், தைரியமாகச் சொல்பவனே கவிஞன். அவன் எதுகை மோனையின் அடிமையல்லன். சொல்லிற்கும் யாப்பிற்கும் இலக்கணத்திற்கும் கூட அவன் அடிமை யல்லன். அவன் அவற்றின் தலைவன். கருத்தின் முதல்வன், அவன் ஒரு சிருஷ்டி கர்த்தா. எந்தப் பழைய வழக்கத்திற்கும் கொத்தடிமையல்லன். பழைய குட்டையிலே பாசி படர்ந்த பழக்கங்களை ஒழித்து, அவன் வாழ்விற்கு ஓட்டமளிக்கிறான். உண்மைக் கவி ஒரு தீர்க்கதரிசி.

அவன் பழங்கவிகளின் எதிரொலியல்லன், பழைய வழக்கத்தின் பின் பாட்டுக் காரனல்லன். கவிஞன். பிறர் அறியமுடி யாத அருளாவேசத்தை விளக்குவோர். நிகழ் காலத்திற் படித்த மகத்தான எதிர் காலச்சாயலின் கண்ணாடிகள். அங்கீ காரமின்றி உலகிற்கு அறமளிப்போர் கவி களே.''

''காற்று எங்கும் வீசும்; நானும் அப்படியே எங்கும் உலவுவேன்'' என்று மெய்யறிஞரின் பண் பையும் சுட்டிக் காட்டுகிறார் வால்ட் விட்மன்.

மேற்படி கருத்துக்களுடன் அறிஞர் அண்ணா துரை அவர்களின் இலக்கணத்தையும் ஒப்பிட்டுப் பாருங்கள். அச்சுக்கு அச்சு பொருத்தமாக உள்ள தைக் காண்பீர், தமிழ்க் கவிக்கோர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ; வசனத்திற்கோர் புரட்சிக் கலைஞர் அண்ணாதுரை.

''உயரிய கருத்துகளே மனிதர் குறிக் கோள். வீரமே ! ஆர்வமே ! ஆற்றலே நீவிர். எனக்கு ஆண்டவராகுக.

என அமெரிக்க புரட்சிக் கவி வால்ட் விட் மன் ஆசிக்கிறார். நாட்டுப் பொது நலமும்

நல்லறிவு வளரும் கருதும் நம் மெய்யறிஞரின் உயரிய குறிக்கோளும் இதுவே யாகும்.

சமுதாயத்துக்கு நலிவு கூட்டும் பரம்பரைப் பாசி படிந்த கருத்துக்களும் பழக்க வழக்கங்களும் பறந்தோடச் செய்யும் துறையிலும் முறையிலும் இவர்கள் துணிவுடன், வீரத்துடன் புதுமைக் கருத்துக்களை—நாட்டுக்கும் நடப்புக்கும் ஏற்ற முறையில் வெளியிடுவர். சில மக்களும் வெறுத்திடலாம்—எதிர்த்திடலாம்; தொல்லைகள் விளைக்கலாம் முதலில், ஆட்சியாளரின் ஆதிக்கக் கோலும் அச்சுறுத்திப் பாயலாம்—ஓங்காரமிடலாம். ஆயினும் அஞ்சார். அஞ்சார்-பிறவித் தலைவர்கள். வறுமைக் கண்டு அஞ்சார். ஏளனம் கண்டு சலித்திடார். எதிர்ப்பு கண்டு நடுங்கி ஒடுங்கமாட்டார்.

"வாளா ! வீசு என் கழுத்தில். ஆனால் என் தூய்மைக் கருத்துக்களை வெட்டி வீழ்த்த முடியாது," என்று முழங்குவர். "துப்பாக்கி குண்டுகளா ? பாய்ச்சு என் நெஞ்சில், ஆனால் அந்த நெஞ்சத்தில் எழுந்து வெளிப்பட்ட மெய்மொழிகளை மாய்க்க முடியாதே" என்பர். "சிறையா? எனக்கு—இந்த உடலுக்குத்தானே ! என் கோட்பாடுகளை சிறையிட முடியாதே" என வீரவுரை முழக்குவர்.

சுயநல ஆட்சிக் கோலருடன் சேர்ந்து, மக்கள் சிலரும், இத்தகுப் புதுமைப் புரட்சித்

தலைவர்களையும் அறிவாளர்களையும் துவக்கத்தில் வெறுக்கலாம்; கண்டிக்கலாம். ஆனால் - மக்களின் உள்ளங்களிலிருந்து இவர்களைப் பெயர்த்தெடுக்க வியலவே இயலாது. தனித்து எண்ணுவர், அவர் வெளியிட்ட கருத்துக்களை. ஆய்ந்து பார்ப்பர் நிதானமாக நேர்மை மதி கொண்டு அதன் சிறப்பை யுணர்வர், உள்ளம் பறிகொடுப்பார்.

நன்னம்பிக்கையை தங்களுடைய உயிரோட்டமாகக் கொண்டு சீர்திருத்தத் தலைவர்களும் அறிஞர்களும் நாவலர் பாவலர்களும், அவர்களுக்கு ஏற்பட்ட தொடக்க எதிர்ப்புக் கண்டு தயங்கார். மெய்மைக் கருத்துக்களை தம் உள்ளத்தில் பதுக்கி வைத்து, மடியவும் இடங் கொடார் துணிவுடன் வெளியிடுவர், தங்கள் மனதில் உதித்த நற் கருத்துக்களை விளைவைப் பற்றியோ எதிர்ப்புகள், தண்டனைகளைப் பற்றியோ அவர்களுக்கு கவலையோ கலக்கமோ கிடையாது. எதிர்ப்பு உரம் கூட்டும் என்பதே அவர்களுடைய உயிர்க்கொள்கை. எதிர்ப்பு வளர வளர தூய்மையும் ஆதரவும் வளருமென்ற மெய்மையை உணர்ந்தோர் அவர்கள்.

தம்மைப் போன்ற புரட்சித் தலைவர்கள்—நாவலர்கள்--கலைஞர்கள்--அறிஞர்களின் நிலைமையும் வாய்ப்புகளும் யாவை என்று திராவிட நாட்டுத் தனிப்பெரும் அறிஞர் கூறுகிறார் :--

புரட்சித் துறையில் ஈடு பட்டவர்கள் பெரிதும் துவக்கத்தில் பூவால் அர்ச்சிக்கப் படுவதில்லை. புன்மொழிகளையே வீசப்பெறுவர். அதிலும் :மொழி வீசும் துறையில் ஈடும பட்ட புலவர்கள் உலகிலே புத்தம் புதிய புரட்சியை ஒருவர் வெற்றிகரமாகச் செய்து வருவது கண்டால், பொச்சரிப்பின் விளைவாகப் புன்மொழி, மாரிபோலப் பெய்யத்தானே செய்யும்"

இந்தத் தொல்லை மாரி கண்டு தயங்குவரா, தடைப்பட்டு நிற்பரா, இப்புரட்சி அறிஞர்கள் ? கட்டுப்பட்டு கிடக்குமா — ஒடுங்குமா அவர்களுடைய புதுமைக் கருத்துக்கள் ? இந்த மாரியை சட்டை செய்யவே மாட்டார்கள். புரட்சியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இதற்கு நேரம் ஏது ? போரிட்டார் போரிட்டார், போரிட்டுக்கொண்டே இருப்பார்கள். வென்ருர், வெல்கிருர், வெற்றி, பெற்றபடியே இருப்பர்" என்று உறுதி கூறுகிருர்.

"மக்கள் நலிவை, அவர்கள் படும் கொடுமைகளைக் களைந்தேயாகவேண்டும்" என்பதே

பிறவிப் பெருந் தலைவரின் இலட்சியமாக இருக்கும். உண்மை மெய்யறிவுத் தலைவர் மக்களோடு வாழ்பவர், மக்களுக்காக இருப்பவர், மக்களின் வேலையைச் செய்பவர், மக்கள் வாழ வழி அமைப்பவர், அவருடைய வெற்றியினால் மக்களின் வெற்றியும் ஓங்கும், நாடும் மகிழ்வும் இணைபிரியாத் தோழர்களாகிவிடும். மக்களின் கருத்தே அறிஞரைப் போன்ற மெய்த்தலைவர்களின் கருத்து. மக்களின் மனத்துடிப்பே இவருடைய மனத்துடிப்பு. மக்களின் நல்லவாழ்வே இவரது வாழ்வு. மக்கள் மகிழ்வே இவரது மகிழ்வு, மக்களின் செழிப்பே இவரது செழிப்பு. இவரது செல்வம்-- அறிவுக் கருவூலம் இது மக்களின் செல்வம். குணமென்னும் குன்றேறி நின்றார் இவர். நிறைமொழிப் பெருமையாளர். அறவோர். மற்றெவ்வுயிருக்கும் செந்தண்மை பூண்டொழுகும் தண் தன்மையாளர். சிறப்பும் செல்வமும் ஈனும் நலத்தினுக்கு ஆக்க மளிப்பவர். மனத்துக்கண் மாசிலாதவர்.

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும் வாயெல்லாம் செயல்

செல்லக்கூடிய இடத்திலெல்லாம் தம்மால் இயலும் அளவிற்கு இடைவிடாது நல்லற மெய்மைகளைக் கூறி; மக்கள் நன்னெறி நடக்க ஊக்கமூட்டுபவர்;

அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழுமில

இப்பிறப்பில், இவ்வாழ்வில், தம் நாட்டு மக்களுக்கு நலம் பயக்கும் நற்செயல்களை செய்வது தான் மெய்யின்பம். மற்றவகை செயல்கள் துன்பம் விளைவிப்பனவே, அவற்றால் புகழும் பெருமையும் கிட்டாதென நன்மொழி கூறிவருபவர். செயற்கரிய செய்து வருபவர். இவருடைய கருத்துக்களின் பெருமையை; இவருடைய சொற்பொழிவுகளைக் கேட்க வந்து கூடும் பல்லாயிரக் கணக்கான மக்களின் எண்ணிக்கையும் இவருடைய நூல்களை அவாவுடன் படிக்கும் லட்சக் கணக்கான மக்களின் எண்ணிக்கையுமே நிரூபிக்கும் போதிய சான்றாகும். இவர் அறிவின் சிகரம். ஆராய்ச்சி வேந்து, இயலின் கூற்று; உண்மை விரும்பி. ஊக்கம் விழைவோர், மக்களின் நல்வாழ்வுக் குழைப்போர்.

நிலவு ஆசிரியர் தமிழ்ச் செம்மல் கணேசனார், மெய்த் தலைவரின் இலக்கணத்தை கீழ்க் கண்டவாறு தருகிறார்.

"மாசிலா கொள்கையர், தான் கொண்ட கொள்கை ஈடேற்றத்துக்கு, மக்கள் நல்வாழ்வுக்கு உழைத்து இழைத்த நரைப்பவர். மனிதப் பிறவியின் நோக்கமே பணி செய்து கிடப்பதென்ற உயரிய இலட்சியத்தை மனதிற் கொண்டு, மட்டில் ஆர்வத்துடன் மங்கா

வுள்ளத்துடன் இராப் பகலாக இடையீடின்றி "என் சமூக முன்னேற்றமே எனது முன்னேற்றம்" என்ற கோட்பாட்டைக் கொண்டவர்."

"அறிவே ஆற்றல். உழைப்பே உறுதுணை. கற்பனை யின்பத்தை கனவுடன் சேர்த்துவிடு, ஆய்வு மதிகொண்டு எதனையும் கணித்தறி. கண்மூடிப் பழக்கத்திற்கு கட்டு சமாதி. கை மேல் நலன் பயக்கும் நற்பழக்க வழக்கங்களை நாட்டில் பரவச் செய். உழைப்பு உன் வசம். உரம் உன்னிடம். உழைத்து வாழ். பிழைக்க உழை, உனக்கு மன்னன் நீ. உன் வாழ்வின் கர்த்தா நீயே !"

இவையே அறிவு அண்ணல் வடித்துத் தெளித் தளிக்கும் வளக்கருத்துகள்.

மாணவர் மண்டலத்தில்........

தந்தை மகற் காற்று நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்.

என்றார் திருவள்ளுவனார். சபையின் கண் தன் மகன் முன்னணியில் இருக்கச் செய்ய அத்தந்தை செய்ய வேண்டுவது யாது? அம் மகன் சின்னஞ்சிறு சீராளனாக இருக்கும்போதே அவனுக்குக் கல்வி, ஒழுக்கம், வாழ்க்கைத்துறை,

அறிவு ஆகியவற்றை ஊட்டுதலாகும். இளமை யிலேயே அவனை வளப்பயிராக்குகிறார், உரிய நன்னெறிகளைக் கைக்கொண்டு. இளமையே, பிற் கால வளத்திற்கு, அடிப்படை யிடத்தக்க பருவ மாகும். வளரும் பயிர் முளையிலே காணக் கிடைக் கும். முளையில்—சிறு செடியின் வளம்படைத்த நிலைமை, அதன் பிற்காலப் பலனை சுட்டிக்காட் டும்.

இதே போல் மானிடரின் பிற்கால வாழ்க்கை வளம் இளமைக் கால நிலவரத்தைப் பொறுத் துள்ளது. இளமையில் அறிவையும் ஆற்றலையும் வளப்படுத்தினால்தான், வாழ்க்கைத் துறையைக் கைக்கொள்ளும் பிற்காலத்து வளமிகும். இத் தகைய வளமாக்கும் களம் முதலாவது வீடு. வளமாக்கும் முதல் பொறுப்பாளி தந்தை. இரண் டாவது களம் கலைக்கூட்டம். இங்கு வளமாக் கும் பொறுப்பாளி ஆசிரியர்கள். இத்தகைய ஆசிரியர்கள் தந்தையின் அதிகப் பொறுப்பு உணர்ச்சியும் பரந்த உலக அறிவும் கொண்டிருத் தல் அவசியம். குறுகிய கோட்பாடுகளுக்கும் அறிவுக்கு பொறுத்தமாகா பாடாபோதனைகளுக் கும் இடமளித்தலாகாது. இவர்கள் எத்தகைய அரசியல், சமுதாய மதக் கட்டுப்பாடு தளைகளில் தம்மைக் கட்டுப் படுத்திக் கொள்ளலாகாது, மலையுறுவி போல், தன்னியக்கத்தினராக இருத் தல் வேண்டும். தென்றல் போல் தூய நன் மணக் கருத்துக்களை மாணவர்களுக்கு அளிக்க வேண்டும். ஆயினும் நடை முறையில் இவ்

விதம் இல்லையே. பத்தாம் பசலிக் கோட்பாடு களையும்—காலத்துக் கொவ்வக் கருத்துக்களை யும்—சிறைக்கூட கட்டு திட்டங்களையும் தானே நடப்பு கலா நிலையங்களில் காணக் கிடைக்கின் றது. இவற்றால்தான், மாணவர்களும், புதிதாக வண்டியிலே பூட்டப்பட்ட இளங் காளைகளைப் போல் மருளவேண்டியதாகிறது. அடக்கும் கட்டுப் பாடுகளால் அவர்களுடைய சொந்த அறிவோட்ட மும் உரமும் ஒடுக்கப்பட்டு, மூட்டை வண்டி மாடுகளின் பான்மையை அடையச் செய்யச் செய் யப்படுகின்றனர். அதனால்தான் அவர்கள் பிற் காலத்து, வாழ்க்கை நெறியைக் கைக்கொள்ள வேண்டிய பொறுப்பாளிகளாகும்போது; மூட்டை வண்டி மாடுகளைப் போல், பாழைய தாரைகளில்—பள்ளமும் மேடும், நொடியும் மிக்க பாதைகளி லேயே போகும் போக்கினராகி விடுகின்றனர். புதியன கண்டு புது வழி சொல்லும் ஆற்றலும் அறிவோட்டமும் மற்றவராகின்றனர். புதுமையைக் கண்டு மருள்கின்றனர். புதுமைப் பாதையில் போக் கினாலும், பழக்கத்தின் கெடுமதியால் மீண்டும் கரடு முரடான பழமைக்கே திரும்பிவிடுகின்றனர். புதுப்பாதை நல்ல பாதை யாயிற்றே என்றும், அவர்களுடைய பழம் பழக்கத்தில் மழுங்கிய அறிவு எண்ணுவதில்லை. பழையதை விட்டுப் புதியதில் சென்றால் ஆபத்து வருமோ என்று கற்பனை செய்து கொண்டு திகிலடைகின்றனர். மற்றும் சூழ்ந்துள்ளவர்களும் இப்போக்கினராக இருக்கையில், தனித்துப் புதுமையில் பாயத் துணிவு ஏற்படுதில்லை, இத்தகைய துணிவு ஏற்

பட வேண்டுமானுல், பள்ளிக்கூட வாழ்க்கை யிலேயே இதற்கு உரமிட்டாகவேண்டும்.

உலகில் தலை சிறந்த சீர்திருத்த வாதிகள்; ஆட்சித் தலைவர்கள், கலாவல்லுனர்கள் ஆகியவர் வாழ்க்கை வரலாறுகளைப் படித்துப் பாருங்கள்.

பெர்னுட்ஷா—ரவீந்திரநாத் தாகூர் போன்ற உலகு புகழ் கவிகளும், நாடகாசிரியர்களும், மாணவ வாழ்க்கையிலே, புரட்சிக்காரர்களாக—(பள்ளி ஆசிரியர்கள் வசனப்படி "குறும்புக்காரர்களாகவும் அடங்காப் பிடாரிகளாகவும்) இருந்தவர்களே. தாகூரும் பெர்னுட்ஷாவும், பள்ளிக்கூட கட்டுப்பாடுகளை விரும்பாதவர்களாகி, பள்ளிக்கூட வாழ்க்கையை வெறுத்துத் தள்ளினர். இதனுல் இவர்கள் மாடோட்டும் மடையர்களாகவும் அடிசில் தொழில் அசடுகளாகவும் மிருந்துவிடவில்லை. உலகு புகழ் நாடகாசிரியர்களாயினர். உலகிற்குப் புதுமை கருத்துக்களையும் புதுமைக் இலக்கியங்களையும் தந்துதவினர்.

அரசியலிலே, சுபாஷ் சந்திரபோஸ் ஒரு மாமணி. மாணவ வாழ்க்கையிலே, இவர் தகாத கட்டுதிட்டங்களை எதிர்த்து கலாசாலை வாழ்க்கையைக் கைவிட்டவர். ஓரினம், தன்னை உயர்வாகக் கருதிக்கொண்டு, மற்ருெரு இனத்தைத் தாழ்மையாகப் பேசுவதை சகிக்காது. அவ்விதம்

பேசிய ஆசிரியரைக் கண்டித்துப் புரட்சிக் கொடி தூக்கியவர் இவர். வெற்றியும் கண்டவர்.

இந்த வீரர்கள்' அறிஞர்கள் ஆகியோரின் வரலாறுகளிலிருந்து காணக் கிடைக்கும் மெய்மை யாது ? மக்கள் பிற்காலத்து மகிமை பெற வேண்டுமாயின் மாணவ வாழ்க்கையிலே அவர்களை, நல்லறிவு—பகுத்தறிவு மிக்க வளமுள்ள பயிர்களாக வளர்த்த வேண்டுமென்பதன்றோ ?

இந்த மெய்மையை தக்க முறையிலே பயன்படுத்திக்கொண்டு வருபவர் அறிஞர் அண்ணா அவர்கள் இப்போதும். இவருடைய கண்களில் தோற்றும் ஒளிகொட்டும் குறுகுறுத்த பார்வை; இவரும் ஒரு மாணவப் புரட்சியாளராகத்தானிருக்க வேண்டுமென்பதைக் காட்டும். மாணவப் பருவத்திலே இவர் கருத்தில் கொண்ட, அறிவுச் சீர்திருத்தப் பணியை, இப்போதும் தொடர்ந்து செய்து வருகிறார்;

"தம்மில் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது

என்ற மெய்மையை பெற்றோரும் உணர்ந்து கொள்ளும்படி செய்து வருகிறார். மாணவரிடையே மாணவராகப் புழங்குகிறார். பெற்றோரிடையே பெற்றோராக நடந்து நன்னெறி கூறுகிறார். இரு குழுவினருக்கும் அவரவர்களின் மனப்பாங்கிற்கு

ஏற்ற முறையில் சீர்திருத்தக் கருத்துக்களை தெரி வித்து வருகிருர்.

"நானொரு தலைவன், அறிஞன், பத்திரிகாசிரியன், நூலாசிரியன், ஏ மாணவர்களே! நீங்கள் வெறும் கற்றுக்குட்டிகள். உங்களுக்கு ஒன்றும் தெரியாது. நான் சொல்வதைத்தான் கேட்க வேண்டும்" என்று இவர் வைதீகச் சூருவளிப் போக்கிலே நடந்துகொள்வதில்லை. இளமையில் தான் புதுமைப் பொலிவு காணு மென்றக் மெய்மையை உணர்ந்தவர். இளமைக் கருத்துக்களை வெளியிட ஊக்கமூட்டுபவர்—ஆதரவு தருபவர்—தாமும், தமது எழுத்துத் துறையிலும், பேச்சுத் துறையிலும் பெருமையுடன் பயன்படுத்திக்கொள்பவர். மாணவர் கூறும் வளைந்த கருத்துக்களை, லாவகமாக நிமிர்த்தித் தந்து, பெருமைப் படுத்துபவர். எனவேதான், மற்ற கலையில், அரசியல் சமுதாய இயல்; தொழிலியல் பேரறிஞர்களைவிட அறிஞர் அண்ணு அவர்கள் மாணவர் உலகில் மிகுந்த செல்வாக்கும் ஆதரவும் பெற்றுத் திகழ்கிருர். மாணவ மண்டலத்திலே, அன்ருடம் புதுப் புது அறிஞர்களை உற்பத்தி செய்து வருகிருர்: உலகின்புறக் கண்டு தாமின்புறுவர் மேலோர் என்ற நன் மொழிக்கு இலக்காகத் திகழ்கிருர்.

பெர்னுட்ஷா – புதுவண்ணம

தங்கள் கண்பார்வையில் விசேஷம் ஒன்று மில்லையே !

அப்படியென்றால்...?

சாத்ாரணமாகத்தானிருக்கிறது.

சாதாரணம் ! அசாதாரணம் ! தங்கள் தொழில் துறை புதிர் கதையாக இருக்கிறதே தாங்கள் கூறுவது ! விளக்கம் தேவை ; நண்பரே !

அதாவது தாங்கள் எவ்வுருவத்தை— எப் பொருளைப் பார்த்தாலும் அப்பொருளின் மெய் யுருவை—புகைப்படக் கருவி போல் அப்படியே காணும் இயற்கைப்பண்பு கொண்டிருக்கிறது தங் கள் கண்கள். மெய்யமைப்பு உருவைக் காணும் பண்பு கொண்ட பார்வை யுடையோர் உலகில் பத்து சத விகிதம் பேரிருப்பது கடினம், மற்ற தொண்ணூறு சதவிகிதம் பேர்களின். கண்கள் எப்பொருளாயினும் அப்பொருளின் மெய்யுருவை அப்படியே காணவியல்வதில்லை. பொருள்களின் அமைப்பு – வண்ணம் ஆகியவற்றின் இயல்பான தோற்றம் அவர்களுடைய கண்களுக்குத் தோற் றுது, உருவம் குறைபட்டும், மிகைப்பட்டும் தோன்

றும். (பூதக் கண்ணுடிகளும் வர்ணக் கண்ணுடிகளும் போன்று.)

O

அவன் உலகத்தாரைப் பார்த்துச் சிரிக்கின்றனர். உலகத்தார் அவனைப் பார்த்துச் சிரிக்கின்றனர்:

"அவன் சிரிப்பிலே ஒரு வெறுப்பு—துக்கம்—ஏக்கம்—கவலை--மன நொடிவின் எதிரொலிகள் இவைகள்...ஏனோ ?

"மேகப்படலம் போன்று நாம். அறிவுக் கடலை ஆய்ந்து, நல்லறிவு முத்துக்களை--அறிவு மொழிகளை— நன்னெறிச் செம்மொழிகளை—வாழ்க்கை நலமுறும் நல்வழிகளை—திரட்டி அழகுறக் கோர்த்து அளிக்கிறோமே, உலகோர்க்கு !

நல்வாழ்வுக்கான இந்த நன்னெறிப் புதையல்களைத் தேடிப் பண்படுத்தி, அழகுற அளித்த நம்மை, இந்த உலகத்தார் எப்படி நடத்துகின்றனர்...? என்ன அலட்சியம் ! அசிரத்தை ! பராமுகம் ' கேவலம் ; ஓர் பிச்சைக் காரனுக்குக் கூட ஓரளவு மதிப்பு—கையளவு

உணவு—இன்றேல், ஓர் வழி யனுப்பு. மொழி கிடைக்குமே !

ஆனல் நமக்கோ — உலகோர் நல்வாழ்வு வாழ நற்பலன் முறைகளைத் தேடி யளித்த எழுத் தாளனை நமக்கோ, உலகத்தாரின் உதாசீனம் தானு கைமாறு ? குழிவிழுந்த கண்கள், ஒட்டிய வயிறு—உலர்ந்த வுடல் இவைகள் தாமா வாய்ப் பது ? அந்தோ ?—உலகமே !"

என்ற எண்ணப் புயல் எழுந்து குமுறுகிறது, அந்த எழுத்தாளனின் கற்பனைப் பண்புடைய உள் ளத்தில்.

அந்த வுலகம்—பண மிதத்தில் மிதக்கும் அந்த உலகத்தோர், இந்த எழுத்தாளனைப் பற்றி எண்ணு வதோ...?

"வீணன்—கற்பனைப் பித்தன்—உலகிற்கு வழி காட்டுகிருனும் வழி ! தான் வாழ வழி யறியான் இவன்—தான் வாழ நெறி காணும் அறிவுக் கண்ணிலான் இவன்—பிறருக்கு வழி காட்டுகிருனும் வழி !"

என்பதே யாகிறது. அவனுடைய, கற்பனை, ஆய்வு மதி கண்டும் கணித்தும் அளித்த நல்லறிவுச்

செல்வத்தால் பெற்ற — பெறும் — பெறப்போகும் நன்மைகளையும் மறந்தவர்களாக எள்ளி நகையாடு கின்றனர்—நேரிலும், மறை முகமாகவும்.

இதனைப் பார்க்கிருன் அறிஞன்—உணர்கிருன் அந்த எழுத்தாளன்—அவன் மனம் துடிக்கின்றது. உள்ளம் பற்றி எரிகிறது—வயிறு தகிக்கிறது. ஒரு பெருமூச்சு—எரிமலை குழம்ப ஆவி போல் கிளம்பு கிறது. மனமும் நொடிவுறுகிறது தான். ஆயினும்... ...ஆயினும்......

நல்லாதரவில் : செல்வாக்கில்—புகழில்—நல் வாழ்வில் நம்பிக்கை ; நம்பிக்கை. அந்த நம்பிக்கைக் குத்தான் முடிவில்லையே ; அந்த எழுத்தாளனின் ; கலைஞனின் கற்பனை ஊற்று உள்ளத்தில்—உயிருடல் பிரியும் வரை......!

இந்த நிலைமையில்—மேல் விவரிக்கப்பட்ட எழுத்தாளனின் பஞ்சகால நிலவரத்தில் இருக்கும் போதுதான் ஜார்ஜ் பெர்ஞட்ஷா—நாற்பதைக் கடந்த வயதில், தமது நண்பரான கண் வைத்தி யரைச் சந்தித்தார். அவரும் பெர்ஞட்ஷாவின் கண் பார்வையைச் சோதனை செய்தார். இது பொழுது போக்காகவோ, ஆராய்ச்சி சோதனைக் காகவோ இருக்கலாம். இந்த ஆராய்ச்சி சோதனைக்

குப் பின்னர்தான் மேலே குறிப்பிட்ட உரையாடல் நடந்தது, இருவருக்குள்ளும்.

கண் வைத்தியரின் கருத்தைக் கேட்டதும் பொதுப்படையாக அனைவரும் நினைப்பது எதுவாக, இருக்கும் ?

கவலை நீங்கியிருப்பர், தம் கண்ணிலே கோளாறு இல்லை என்று திருப்திகொண்டு, ஏழையாயின், கண்ணுக்குக் கண்ணாடி வாங்க ஆகும் ? செலவு மிச்சமாயிற்று என்று கவலை நீங்கியிருப்பர்.

ஆனால் இத்தகைய எண்ணங்களா உதித்தன அந்தக் கலைஞனின்—பெர்னாட்ஷாவின் கலையுள்ளத் தில் ? இல்லை.

எழுதினார் பற்பல கதைகள் ; நாடகங்கள் இராப் பகலாகப் பாடுபட்டு—கண் விழித்தும், பட்டினி விழுந்தும். திருத்தித் தொகுத்து, அழகுக் கோப்பமைத்து ; சுமந்துகொண்டு சென்றார் அந்தக் கையெழுத்து ஏடுகளை ; கடைகள் தோறும், புத்தக வெளியீடு நிறுவனங்கள் தோறும்—நாடகக் கழகங்கள் தோறும்—நாடக உரிமையாளர்களின் தங்கு மடங்கள் தோறும். பலன் ? கைமேல் பணமா ? ஏமாற்றம்தான்— வசதியில்லை என்

பதில். தகுதியில்லை என்ற கருத்து. மக்களுக்கும் பிடிக்காதே என்ற, அபிப்பிராயம். " உமக்குப் பெயரில்லையே ! புகழ் இல்லையே " என்ற பிரலாபம், " அய்யே . இதென்ன, பள்ளிக்கூடத்து உரையாடலா ' அம்மையார்களின் வீட்டு அரங்கப் பேச்சுக்களை அப்படியே கேட்டு எழுதிக்கொண்டு வந்து விட்டீரோ ? கற்பனையுமில்லை. கத்தரிக்காயுமில்லையே ! " அய்யோ ! இதென்ன, எல்லாம் தலை கீழ்ப் பாடமாகவுள்ளதே. பெரும் புரட்சிக் கருத்துக்கள் கொண்டிருக்கிறது, பரம்பரை சமுதாயக் கோட்பாடுகளைக் கிண்டல் செய்கிறீரே! மதத்தை வம்புக்கிழுக்கிறீரே. பழங்கால பரம்பரை கோட்பாடுகளுக்குக் குழி தோண்டுகிறீரே. போம், அய்யா போம். இந்த வம்பும் வழக்கும் எங்களுக்கு ஏன் ? கிடைக்கும் சோற்றில் மண்ணைப் போடவா வந்தீர் ? நாங்கள் நல்ல நிலைமையில் நடமாடிக்கொண் டிருப்பது கண்டு உமக்கு வயிற்றெரிச்சலா ? எங்களைச் சிறைக் கோட்டத்தில் தள்ளவா இந்த நாடகங்களையும் கதைகளையும் எழுதிக்கொண்டு வந்தீர் ?" எனக் கேட்டு விரட்டியவர்களும் பற்பலர்.

இப்போக்கைக் கண்டு அவர் மனச் சங்கடமுற்றார், ஆனால் மனம் தளரவில்லை. தம் முயற்சியைக் கைவிடவில்லை, " வயிற்றை வாட்டி வதைக்கும் பிழைப்பு ஒரு பிழைப்பா, கணக்கெழுதினாலோ, மூட்டை தூக்கினாலோ வயிற்றுக்காவது கிடைக்கும் " என்று எண்ணமிடவில்லை ; மாஜி கணக்காயரும் மூட்டை தூக்கியுமான அவர்.

இதற்குக் காரணம் அவரே கூறுகிறார் தமது வரலாற்றில்.

" என் அறிவாற்றலிலே எனக்குத் திட நம்பிக்கை யிருந்தது. என் கோட்பாடுகள் நியாயமானவைதாம். நாட்டு நலிவை நீக்கி, நல் வாழ் வளிக்கும் சிறந்த " மூவா மருந்துகள் " தாமென்று நான் திட்டவட்டமாக நம்பினேன் " என்று விளக்கி யிருக்கிறார்.

" நம்பிக்கை, நம்பிக்கை ; உயிர் உடலைவிட்டுப் பிரியும் வரை ; தம் ஆற்றலிலே, கொள்கையின் சிறப்பிலே. அந்த எழுத்தாளர்களுக்கு—கற்பனை கனவினருக்கு நம்பிக்கை மறைவதில்லை. இந்த " நம்பிக்கை " தான் பெர்னாட்ஷா உலகு புகழ் நாடகாசிரியராகத் திகழ உறுதுணையாய், ஊக்கச் சக்தியாய் இருந்தது.

இந்த நம்பிக்கை யுள்ளம், கண் வைத்திய ரின் கருத்தறிந்ததும் கருதியது என்ன ? " கண் ணேய் இல்லை " என்று முடிவு கட்டிவிட்டு, அதை மறந்து ஒதுங்கி விட்டாரா ?

அவருடைய பிற்கால கலை வாழ்க்கைக்கு, நாடக ஆசிரியராவதற்கு புது ஊற்றுச் சக்தியாகி யது, கண் வைத்தியர் தெரிவித்த இந்தக் கருத்துக் கள் தான். தன் வெற்றிக்குப் புதிய " கண் பார்வை" அளித்தது இந்த கண் பார்வை சோதனையே யாகும்.

"உமது கண் பார்வை சாதாரணமானது, அதாவது பொருள்களின் மெய்யுருவை அப் படியே காணும் பண்பு கொண்டது."

இந்த வாசகத்தால் அவருடைய ஆராய்ச்சி அறிவிலே, கலைக் கற்பனை உள்ளத்திலே, ஒரு புது உண்மை புலனாயிற்று, நாடக அமைப்புக் கலைபற்றிய ரகசியத்தை உணரச் செய்தது.

"சாதாரண கண்கள்—சாதாரண பார்வை—சாதாரணமாகப் பார்க்கிறேன் எப்பொருளையும். ஆம். இதுதான் என் நாடகங்களும் கதைகளும் நாடக உலகத்தினர் கருத்தைக் கவராது போனதற் குக் காரணம். அறிவுக்குப் பொருந்தாத கற்பனைக் கதைகள் நடமாடும் உலகிலே, அறிவுக்குப் பொருந் தும் நடப்பு வரலாறுகள் கசக்கலாயின" என்ற உண்மை அவருக்குப் புலனாயிற்று.

இவருடைய நாடகங்களில் மந்திர தந்திர காதல் காம மோகன சித்திரக் கற்பனைக் காட்சி களோ, கருத்துக்களோ கிடையா. நடப்புச் சமுதாயத்திலுள்ள நடப்புக் குறைபாடுகளை—நடப்புச் சமுதாய மக்களின் மொழித்துறை யிலே; நடப்புச் சமுதாய சித்திகரமாகப் படம் பிடித் துக் காட்டுவார்; எழுத்துக்கள், உரையாடல்கள், மூலம். இவற்றால் ஏற்படும் பலாபலன்கள்—அவ திகள், இடிபாடுகள் ஆகியவற்றையும், நடப்பு

அனுபவத்தில் காணும் அளவுக்கு சித்தரித்துக் காட்டுவார்.

கசந்தது முதலில் இவைகள் எல்லாம் ; நாடக அரங்கு முதலாளிகளுக்கும்—நூல் வெளியீடு நிலைய உரிமையாளர்களுக்கும்.

இவற்றைக் கண்டு தளர்ந்தாரா இந்த " நம்பிகைை தளரா கலைஞர் ? இல்லை. பணமும் வயிறும் பெரிதெனக் கருதி யிருந்தால். " மலிவு நூலாசிரி"யராகி, புத்தகக் கடைக்காரர்களின் பேராதரவைப் பெற்றிருப்பார். பழைய பொம்மைகளுக்கு வர்ணகாகித ஜிகினா வேலைசெய்வதுபோல், பழைய கருத்துக்களைத் தழுவி, பழைய கதைகளிலே, நடப்புக்கால கருத்துக்கள் சிலவற்றை நுழைத்து, புது உருவம் போல் அமைத்துக் கொடுத்து ; நூற்றுக் கணக்கான புத்தகங்களை எழுதித் தள்ளியிருக்கலாம். ஆனால் இவர் வயிற்றுப்பாட்டு—தேநீர் காசு எழுத்தாளனாக இருக்க விரும்பவில்லை.

தன் கொள்கை கோட்பாடுகளின் நேர்மையிலே திட நம்பிக்கையும் சீர்திருத்தத்திலே ஆர்வமும் அவரை ' அணா பைசா ' எழுத்தாளனாக விடவில்லை. அறிஞர் அண்ணா அவர்களின்—எழுத்துத் துறை வாழ்க்கை—புகழ் ஏணி ஏற சங்கடங்கள், இதைப்போலத்தானே இருந்தன.

அடிநாளிலே, இவருடைய புதுமைக் கருத்துக்களை—எழுத்துக் கோவைகளை விரும்பிய புத்

தக வியாபாரிகள் யார் இருந்தனர்? இவருடைய புத்தகங்களை வெளியிடத் துணிவு கொண்டோரும் கிடையவே கிடையாதே, இவருடைய எழுத்துத் துறை வாழ்க்கை, துவக்கக் கட்டத்திலே, எழுதும் பேனாவுக்கும் மை வாங்க வசதி யற்ற நிலையில்தானிருந்தது. அவர், தம் சொந்த முயற்சியில் ஆரம்பித்து நடத்த முற்பட்ட மாதப் பத்திரிகையும் சில மாதங்களில் "பணரத்த சோகை" நோயால் மரணமடையத்தான் வேண்டிய தாயிற்று. மனம் நொடிவு ஏற்பட்டிருக்கலாம், அப் போது இவருக்கு. அந்த மனநொடிவிலே இவர் இந்த எழுத்துத் துறைப் பணியை கைவிட்டு, ஒரு கல்லூரிப் பொருளாதார பேராசியராகவோ; சர்க்கார் காரியாலய குமாஸ்தாவாகவோ போயிருந் தால்—வயிறார உண்டு, கவலை யற்றுத் தூங்கிக் காலம் கழித்திருக்கலாம்.

பெர்னார்ட்ஷாவைப் போலத்தான் இவரும் அடி நாளில்; பணத்தையே குறிக்கோளாகக்கொண்டு, எழுத்துத் துறையில் கருத்துச் செலுத்தவில்லை. ஓரளவுக்குப் பண வசதி கொண்டிருக்கும் இப் போதும் இவர் நடத்தும் எளிய வாழ்க்கை—உடுத் தும் எளியவுடை—சொற்ப உணவு ஆகியவையே இக் கூற்றுக்கு சான்றுகின்றன. பணத்தாசை இருந்திருந்தால் அண்ணாதுரை—தோழர் அண்ணா துரையாகவோ, அறிஞர் அண்ணாதுரையாகவோ ஆகியிருக்க முடியாது.

ஒன்று வுலகத் துயர்ந்த புகழல்லால்
பொன்றுது நிற்பதொன்றில்

என்ற பொய்யா மொழியின் மெய்ப்பொருளை உணர்ந் தோராதலின், புகழே என்றென்றும் மறையாத செல்வம் ; பொருள் ஒரு ஆற்று வெள்ளம் என்ப தனை கருத்தில் கொண்டார் போலும். அப்புகழுக்கு, அடிப்படையான, விடா முயற்சியிலும் உழைப்பிலும் கருத்து செலுத்தினர் ; வறுமையில் பொருமை கொண்டார்.

இதன் பயன் ? இப்போது இவர், சீர்த்திருத்தத் துறையில் செம்மலாகவும், எழுத்துத் துறையில் ஏந்த லாகவும், நாடகத் துறையில் தமிழக பெர்னுட்ஷா வாகவும் விளங்குகிருர்.

" சாதாரணமானவர்களைப் போல் நான் பணத்தாசை பிடித்தவனுக இருந்திருந்தால் என் வாழ்க்கையை எளிதில் நடத்த வாய்ப் பேற்படுத்திக் கொண்டிருப்பேன். அசாதாரணக் கண்ணுடியை என் கண்களுக்கு அணிந்து என் சாதாரண " பார்வையை, புத்தக வியாபாரி களின் கருத்துக்கேற்றபடி மாற்றிக் கொண் டிருப்பேன். ஆனுல் நான் என் திறமையில் ஆணித்தரமான நம்பிக்கை கொண்டிருந் தேன்— என் சாதாரண பார்வையிலே, ஆசை

கொண்டிருந்தேன். எனவே என் சுய சக்தியை மூட்டை கட்டி வைத்துவிட்டு, அந்தப் புத்தக வியாபாரிகளின் விருப்பத்திற் கேற்ப பணிந்து கொடுத்து, அவர்கள் விரும்புந் துறையில், விரும்பும் கருத்துக்களுடன் புத்தகங்களை எழுத என் மனம் ஒப்பிடவில்லை.''

என்று பெர்னார்ட்ஷா அவர்கள் தமது கருத்தை வெளியிட்டுள்ளது போல்தான் இவரும் கருத்துக் கொண்டிருக்க வேண்டும். எனவேதான் சாய்ந்து கொடுக்கவில்லை யாருக்கும். தமது எழுத்துத் துறையையும் கொள்கைகளையும் வயிற்றுப்பாட்டுக்காக பேரம் பேச முற்படவில்லை.

மேடையில் தனிச் சிங்கமென முழங்கித் தமது சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பினார்! "திராவிட நாடு" வாரத் தாளையும் அரும்பாடு பட்டுத் துவக்கி, ஆண்டிகள் மடம் கட்டச் செய்யும் முயற்சிபோல், முயற்சிகளை நடத்தி, பொருள் வசதியாகியவைகளைத் தேடிக்கொண்டார், தம் சீர்திருத்த நடையில் வெளியிட்டு மக்களிடையே செல்வாக்குப் பெற்றார். துவக்கத்தில் இவருடைய பத்திரிகையை வாங்கி விற்க மறுத்த விற்பனையாளர்கள் பல்லோர். மக்களிடையே நல்ல விலை போகும் பண்டம் இவர் பத்திரிகையும், இவருடைய எழுத்துக்களைத் தாங்கி வரும் சஞ்சிகைகளும் என்று உணர்ந்து கொண்ட பின் — அதுவும்

சுயலாப நோக்குடன்தான்; பிற்காலத்தில் இவருடைய பத்திரிகைகளை வாங்கி விற்க முற்பட்டனர்.

ஆயினும் புரட்சிக் கருத்துக்கள் — சீர்திருத்தக் கோட்பாடுகள் கொண்ட இவருடைய கட்டுரைகளையும், கதைகளையும் நூல் வடிவில் வெளியிட எந்தப் புத்தக வெளியீடு நிறுவனத்தாருக்கும் துணிவு வரவில்லை.

"அண்ணு"வின்பால் மதிப்புக் கொண்ட தோழர் ஒருவர், ரோமாபுரி ராணிகளை முதல் முதல் புத்தக வடிவில் வெளியிட்டார், ரேஷன் அரிசி காலத்தில் அசல் சம்பா அரிசி கிடைத்ததுபோல் இந்தப் புத்தக "ராணி"யை மக்கள் மகிழ்ந்து, வாங்கினர். அடுத்த சில மாதங்களுக்குள் பெரிதும் சிறிதுமான எண்ணற்ற நூல்கள்; அண்ணுவின் எழுத்தோவியங்கள் வெளிவந்தன. புத்தக மார்க்கெட்டே அறிஞர் அண்ணுதுரை மயமாகி விட்டதென்ருலும் மிகையாகாது. தமிழ் மொழி வரலாற்றில் இத்தகைய புதுமை எக்காலத்திலும் ஏற்படுத்தப்பட்டது இல்லை. அண்ணுதுரை பாணி என்றே ஒரு புதுமை இலக்கணமும் தமிழ் இலக்கியத்தில் ஏற்படுத்தப்பட்டு விட்டது.

இந்தக் குன்ருத் தென்றல் செல்வாக்குக்குக் காரணம் என்ன?

பெர்னுட்ஷா போன்று இவரும் மக்களின் நடப்பு வாழ்க்கையை — குறைபாடுகளை — அக் குறைபாடுகள் நீக்குவதற்கான நல்வழிகளை தமது, கட்டுரைகளிலே, கதைகளிலே, நாடகங்களிலே, படம் பிடித்துக் காட்டியதாகும். மேட்டுக்குடி சீமான்களின் சிறப்புகளை இவர் " பல்லாண்டு" பாடிக்கொண்டிருக்கவில்லை. ஆனல் ஏழைகள்— நடுத்தர நடுத்தெரு நாராயணர்கள் நலிவு நீங்கி, நல்வாழ்வு பெற்று பல்லாண்டு வாழும் வகையில் கருத்துச் செலுத்தி, அக்கருத்துக்களை எழுத்து ஓவியங்களாகவும் சொல்லோவியங்களாகவும் சித்தரித்தளித்தார்.

எந்தக் கோலுக்கும் அஞ்சவில்லை. சீமான்களுக்கு அஞ்சி சிந்து பாடி நிற்கவில்லை. நாட்டுப் பொது நலக் கருத்தொன்றையே குறிக்கோளாக கொண்டன இவருடைய தீட்டுக்கோலும்—சொல்லும், நாட்டுப் பொது நலக் கருத்துக் கொண்ட சான்ருேர்களில் இவரும் சரி ஆசனத்தைப் பெற்ருர்.

" கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்து
கோடாமை சான்ருேர்க் கணி."

என்ருரே, தமிழக நீதி யறிஞர். அதேபோல், வறுமையும் செல்வமும், அல்லலும் சுகமும் மனிதப் பிறவிக்கு இயற்கையாக வுள்ளனதான். இவ்விதம், சுக துக்க வறுமைக்கேற்றவாரெல்லாம் வளைந்து கொடுத்து வாழ்க்கை நடத்துவதும்,

பிறருக்கும் அம்மாதிரியே சொல்வதும் சான்றோருக்கு அணியல்ல — இலக்கணமல்ல என்று மனதில் கொண்டார். அதனுல் நடுநிலைமையிலிருந்து பிறழாத உள்ளம் படைத்தலே சான்றோர்க்கு சிறப்பு என்பதையும் உணர்ந்து அவ்வழியைக் கடைப்பிடித்து நடந்தார்.

நாட்டு நல நோக்கமுடைய சீர்திருத்தச் செம்மல்களுக்கும் எழுத்தாளர்களுக்கும், பிரசாரகர் களுக்கும், தலைவர்களுக்கும் இன்றியமையாத சிறப்புப் பண்பு, வல்லமை கண்டு வளைந்து கொடுக்காமையும், மக்களின் பொது நலம் கருதி, நடுவு நிலைமையில் நின்று பணியாற்றலும் தானே வாய்மொழி சீர்திருத்தச் செம்மல்களைவிட, எழுத்துத் துறையில்— நூல்கள் வரைந்து சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்ப முற்படும் கலைவாணர்களுக்குத்தான் இந்தக் "கோடாமை" உறுதியும்; சீர்தூக்கிப் பார்த்துத் தீர்ப்புக் கூறும் நடுவு நிலைமையும் மிக மிக அத்தியாவசியமாகும்.

" சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல்
அமைந்தொருபாற்
கோடமை சான்றோர்க்கு அணி.

துலாக் கோல்போல் சீர்தூக்கிப் பார்த்து, எந்தப் பக்கத்திலும் சாயாது நடுவு நிலைமையில் நின்று மக்கள் பொது நலனுக்கான பொதுக் கருத்துக்களை

செம்பாகத் துறையிலே கொடுத்துதவுவதே சான் ரேரர்க்கு இலக்கணமாகும். இந்த சீர்திருத்தச் செம்மல்களின் படிக்கல் மக்களின் பொது நல னும் நடப்பு நிலவரமும் வாய்ப்புகளுமாகும், மறு தராசுத் தட்டுப் பொருள்களோ பரம்பரை பழக்க வழக்கக்கோட்பாடுகளும், சம்பிரதாய வாய்ப்புகளும் நிலவரமும் ஆகும். படிக்கல் நிறைக் கேற்பப் பண்டத்தை சரிகட்டுவதுபோல் மக்களின் நடப்பு நிலவரத்திற்கேற்ப பழக்க வழக்கங்களை நிரைகட்டி அளிப்பதே இந்தச் சீர்திருத்தச் சான்ரேரின் கடமையாகின்றது.

## லெனின் — இலக்கணம்

பாட்டாளி மக்களுக்குப் புது வாழ்வளிக்க புதுநெறி வகுத்தளித்த பெம்மான் — அரசியல் பொரு ளியல் கலையியல் சீர்திருத்தச் செம்மல், பழமைப் பாசி படிந்து பாழ்பட்டு நின்ற சமுதாயத்துக்குப் புதுமை ரத்தமூட்டிய தீரர் லெனின், " மெய்கலைஞர் யார் " " உண்மையறிவாளிகள் யார் " மக்களை உய்விக்கும் சான்ரேர் யார் என விளக்கி, அவர் களுக்குரிய சிறப்பிலணக்கத்தையும் தெளிவு படுத்து கிருர்.

" முன்னுலிருக்கும் பொருள்களின் உரு வத்தை சரிவர பிரதிபலிக்காததை நல்ல கண் ணுடி என்று எவ்விதம் கூற வியலும் ? பொது

மக்களின் வாழ்க்கையானது பல்வேறு சிக்கல்களைக் கொண்டுள்ளதாகும். எண்ணற்ற சமுதாயப் பிரச்சனைகளைக் கொண்டது, பல்வேறு சார்பினையும் கொண்டவர்கள், " சூழ்நிலை என்ன ? நடப்பு யாது ? அவற்றின் பலா பலன்கள் யாவை ? நமக்கும் மற்றோருக்கும் உள்ளவாழ்க்கைத் தொடர்பு என்ன ? முன் வரலாறுஎன்ன ? நடப்பு நிகழ்ச்சி என்ன ? பொதுவுலகில் நம் நிலவரம் என்ன? நம் பங்குயாது?" ஆகியவற்றைத் தெளிவுற அறிந்துகொள்ளவியலாதுள்ளவர்கள் பெரும் பாலான பொது மக்கள் உண்மைக் கலைஞனின் ; பொது மக்களுக்கு நல் வழி காட்டும் மெய்யறிஞனின் மேற்படி பிரச்சனைகளைப் பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்திக் காட்ட வேண்டும். அதாவது அவர்களுடைய நடப்பு வாழ்க்கையிலுள்ள குற்றங் குறைகளை எடுத்துக் காட்டி அவர்கள் நல்வழியறிந்து நல்வாழ்வுபெற நற்கருத்துக்களையும் தெரிவிக்க வேண்டும்."

மெய்யறிஞர்கள், சீர்திருத்த அறிஞர்கள் ஆகியவர்களின் மெய்க்கடமையும் இலக்கணமும் இதுவேயாகுமென்று பேரறிஞர் லெனின் சித்தரித்துக்காட்டுகிறார்.

மற்றும் மக்களின் காலத்துக்கும், நடப்புக்கும் வாய்ப்புக்கும் ஏலாத பழக்க வழக்கங்களை சுட்டிக்

காட்டி ; அவற்றை அகற்ற வழிகூறி, நன்னெறிப் படுத்துவதே மெய்யறிவாளரின் பண்பும் பணியு மென்று தெளிவுபடுத்துகிறார்.

" உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

என்ற திருக்குறளின் கருத்தும் ஆழ்ந்து ஆராய்தற் குரியதாகும்.

பழைய ஏடுகளை மனப்பாடம் செய்து, நீர்க் குழாய்களைப் போல் கக்கி விடுவது அறிவாற்ற லாகுமா ? காலத்திற்கு ஒவ்வா கோட்பாடுகளைக் கூறித் திரிபவர்கள் கற்றறிந்தவராவரா ? உலகத் தோடு ஒட்ட ஒழுக அறியாதார் அறிஞராவரா ? இவர்கள் அறிவாற்றலினரோ, கற்றறிந்தோரோ, கலைஞரோ அல்லவே அல்ல என்கிறார் திருவள்ளுவ னார். மற்று கற்றோர் யார் ? உலகத்தோடு ஒட்ட ஒழுகும் முறைகளைக் கற்றாரே கற்றாரென்கிறார், உலகத்தோடு ஒட்ட ஒழுகல் என்றால் என்ன ? செம்மறியாடுகளைப்போல்' பழைமை யாதாயினும், அதனைக் கண்மூடித் தனமாகக் கைப்பற்றி நடப் பதா ? பேரறிஞரான திருவள்ளுவனார் " உலகம் " என்று எதனைச் சுட்டுவார் ?

" நல்லறிவு வுலகத்தையும் — நலிவற்ற உலகத் தையும், நடப்பு வாய்ப்பு வசதிபெற்று நல்வாழ்வு வாழும் உலகத்தையும்தானே அவர் சுட்டுவார்,

காலத்துக் கொவ்வா பழமைப் பாசி படிந்ததை நல்லுலகம் என்று அவர் கூறுரே.

புதியன புகுதலும் பழையன கழிதலும்
வழுவல கால வகையினுல்

என்று குறிப்பிட்டு காலத்துக் கேற்ற புதியவற்றை வரவேற்ருர். எனவே காலத்துக் கேற்ற புதுமைச் சீர்திருத்த வாதியாகிருர், இந்தக் கலேஞரும். ஆகவே மெய்க்கலேஞருக்கு இலக்கணம் புதுமைகளே அளிப்ப தென்பதே யாகிறது.

தக்கார் தகவில ரென்ப அவரவர்தம்
எச்சத்தாற் காணப்படும்

என்ற குறளால்; தக்கார் தகாதார் பண்புகளே தெளிவு படுத்துகிருர். தக்கார், தகாதார் என்பது, அவரவர்கள் செய்த செயலின் பலாப்பலன்களால் உணரக் கிடைக்குமென்கிருர். நற்பலன் விளேயச் செய்பவர் தானே தக்கார்—சான்ருேர்— அறிஞர் — மேதாவிகள் — மகான்கள் எனப்படுவர். நற்பலன் என்ருல் என்ன ? மக்களின் நடப்பு நிலேமைக்கு நற்பயனுவதேயாகும். எனவே மக்களின் நடப்பு நிலேமைக்கு நற்பயன் படும் கருத்துக்களேயும் வழி துறைகளேயும் அறிவிப்போரே மெய்யறிஞரும் — சீர்திருத்தச் செம்மல்களும் — தலேவர்களும் ஆகின் றனர். இந்தப் பண்புகள் — பெரியார்—பெர்னுட்ஷா

—அண்ணாதுரை போன்ற அறிஞர்கள்பால் பொருந்தியிருக்கின்றன.

## தலைமைச்சிறப்பு

" உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே " என வகுத்துக் கூறுகிறது தமிழிலக்கணம்.

இத்தகு " உயர்ந்தோர் யாவர் " எவ்வகையில் ; எத்துறையில், உயர்ந்தோர் ? உயரத்திலா ? ஆதிக்கத்திலா ? பட்டம் பதவியிலா ? பணத்திலா ? அறிவிலா ? ஆற்றலிலா ? தலைமைப் பதவியிலா ?

இன்றைய உலகம் " உயர்ந்தோராக " யாரைச் சிறப்பிக்கிறது ? தலைவரென யாரைக் கொண்டாடுகின்றது ?

> " நாலு பேருக்கு நல்லவனாக நடத்தல். யார் மனமும் புண்படும்படி பேசாமை. எதற்கெடுத்தாலும் " அது என்ன ?" " இது எப்படி ?" என்று கேளாமை. நாலு பேருக்கு எது நல்லதென்று தோன்றுகிறதோ அதன்படி நடத்தல். சிரித்த முகத்தோடு பேசுதல்...... கண்ணாரக் கண்டாலும் குற்றம் கூறாமை.

எதிர்ப்புக்கு வகை ஏற்படும்படி நடவாமை. ஊரைத் திருத்த முன்னுருமை, பழிச் சொல்லுக்கு இடம் வைத்துக் கொள்ளாமை. பகைமைக்கு வழி வைத்துக் கொள்ளாமை.”

இவைகளே பேரெடுக்கவும் புகழ் தேடவும் முற்படுவோர் பலர் கைக்கொள்ளும் நடைமுறைகள்.

மேற்படி முறைகளை மனப்போக்காகக் கொண்டு பணத்தை வாரி யிரைத்துக் கொஞ்சம் ஆர்பாட்ட வேடம் பூண்டுவிட்டால் யாரும் தலைவராகலாம் — பெயரெடுக்கலாம்— புகழ் தேடலாம். இதுதான் பெரும்பாலோர் கையாளும் வித்தை. இந்த நிவாரணத்துக்கு 200 ரூபாய் நன்கொடை. இந்த சங்கத்துக்கு 100 ரூபாய் சன்மானம் என்று பணத்தைக் கொடுத்துவிட்டால், பதிகம் பாடித் துதிக்கப் பட்டாளம் தயார்.

இது அறிஞர் அண்ணு அவர்கள் அனுபவக் கணிப்பு. நாலு பேரை பணத்தால் அர்ச்சித்து, அவர்களைக் கொண்டு நாமாவளி பாடச் செய்து புகழையும் பெருமையையும் மாற்றுப் பண்டமாகப் பெறுபவர்களே பெரும்பாலோர்.

இத்தகையோர். இயற்கைத் தலைவர்களோ பிறவிச் சான்ருேரோ ஆகார். இவர்களிடைய தலைமை

யும் சிறப்பும் புகழும் பட்டமும் பெருமையுமெல் லாம்—பணவீச்சாட்டம் சுணங்கினுல், நாடகமேடை ' ராஜபார்ட்டின் ' பகல் வாழ்க்கையாகிவிடும்.

உண்மைத் தலைவர்கள்—பிறவிச் சான்ருேர் யாவர் ? உலகத்தை உய்விக்க வந்த உத்தமர்களே உண்மைச் சான்ருேர்.

" செயற்கரிய செய்வர் பெரியோர் "
என்று பொய்யாமொழியாரும் சான்ருேர்க்கு இலக் கணத்தைக் குறள் சித்திரமாகத் தெளிவு படுத்தி யுள்ளார். அதாவது சாதாரண மக்கள் செய்ய வியலாத. பொதுநலச் செயலைச் செய்வாரே பெரியார்—தலைவர் என்ருர்.

"செயற்கரிய செய்தல்" என்பதில் ஆழ்ந்த கருத்துப் பொதிந்துள்ளது. செயற்கரிய செயல் கள் யாவை ? முன்னர் யாராவது செய்தது, செயற் கரியவாகாது ? மக்களுக்குப் பயன்படாதவையும் செயற்கரியவை என மக்களால் கொள்ளப்பட மாட்டாது, விரைவில் அழிந்து போவனவும் செயற் கரியவாகா ? எனவே மக்களுக்கு நிரந்தரமாகப் பயன் படுவதும்—அல்லது பயன் கூட்டுவதும், புதுமையும் நிரந்தரமுமானவற்றைச் செய்பவரே பெரியார்—சான்ருேர்—தலைமைச் சிறப்பினர் ஆகின் றனர்.

இத்தகையோருக்குப் பாசி படிந்த பழமை தாராசமாகத்தானிருக்கும், புதுமையே இவர் தேடித் தரும் செல்வம்.

பழையனவற்றிற்கு ஒட்டுவேலை செய்தோ ; ஜிகுஜு சிங்காரிப்பு அமைத்தோ, உலகோரின் கண்களை மயக்கிச் செல்வாக்கு பெற விரும்பார். மதம் அல்லது சமுதாயம் — அல்லது கலாசாரம் — அல்லது அரசியல் துறைகளிலே, கையாளப்படும் சுய நலப் பித்தலாட்டங்களில் பங்கு கொள்ளார். மக்களுக்கு நலிவு கூட்டும் கொள்கைகள், கோட்பாடுகள், நடைமுறைகள், பழக்க வழக்கங்கள், சட்ட விதிகள் யாதாயினும் அவற்றை அம்பலப் படுத்திக் களைய துணிவுடன் முற்படுவர். பணத்துக்கோ, புகழுக்கோ பேராசை கொண்டு ; மக்களின் பேதமையை வளர்த்துப் பயன்படுத்திக் கொள்ளமாட்டார்கள். அதற்கு மாறாக, தம்மை தம் சுக போகங்களை பலியிட்டாயினும் மக்களின் பேதமையை ஒழித்து, அவர்களுக்கு அறிவொளியளிப்பார்.

சான்றோரிலக்கணமான இதனை அண்ணா அவர்கள் சிறப்பாகக் கொண்டிருந்ததனால்தான், திராவிட தளபதி என்றும், அறிஞர் என்றும் சீர் திருத்தச் செம்மலென்றும் சொல்லின் செல்வரென்றும் நாடகக்கலை ஆசிரியரென்றும் போற்றுதலுக்குரியவரானார்.

கலையிலோ, நூலிலோ, எழுத்திலோ, சொல்லிலோ—நாடகத்திலோ இருந்த களைகளைக் களைந்

தெரிந்து, புதுமை அமைப்புத் தந்து வரும் புத்தா ஆகவும் விளங்குகிருர், இந்த சீர்திருத்தப் போராட்டத்தில் முன்னணியில் நிற்கும் தளபதியாகவு முள்ளார். வழி வகுத்தளிப்பதில் மதிமப்திரியாக வும், திட்டத்தை நிறைவேற்றச் செய்வதிலே வேந்தராகவும் திகழ்கிருர். மக்கள் தலைவராதல் வேந்தரினும் சிறப்புடையதாகும்.

அஞ்சாமை, யீகை அறிவூக்கம் இந்நான்கும்
வெஞ்சாமை வேந்தன் இயல்பு

என்ருர் திருவள்ளுவஞர்.

தலைவர்களுக்கோ இவைகள் சிறப்புப் பண்புகள். அறிஞர் அண்ணு அவர்களை தலைமைப் பதவிக்குச் சிறப்புரிமையாகச் செய்தது இந்த "அஞ்சாமையும் அறிவூக்கமு"மே யாகும்.

பாமர மக்களும் எளிதில் நெருங்கிப் பழகி, தங்கள் குறைகளை நேரில், கூறி அறிவுரைகளை நேரில் அறிந்து கொள்ள வசதிப்படும்படி இவர் "காட்சிக்கு எளியராகவும் கடுஞ்சொல்லனுகவும்" இருக்கிருர்.

இத்துடன் மந்திரத் தலைவர்—மதிமந்திரி—"கருவியும் காலமுஞ் செய்கையுஞ் செய்யு மரு வினையு மாண்ட தமைச்சு" என்றவாருக மக்கள்

நலனுக்கானவற்றை ஆய்ந்து கணித்துத் தெளித் தெடுத்துக் கூறவல்லார்.

"செருக்குஞ் சினமும் சிறுமையும்" இல்லார் தம்மிலும் சிறந்தோரை சிறப்புச் செய்பவர்.

தம்மிற் பெரியார் தமாரார வொழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை.

என்ற மெய்ம்மையில் நற்பயனை அறிந்துகொள்ளும் தணிவுப் பண்பினர். ஆயினும் தம்மைவிட பெரியோர் என்பதற்காக அவர்கள் கூறியவற்றை அப்படியே ஏற்றுக்கொள்ளும் போக்கினரல்ல. அவர்கள் கூறுவனற்றுள் குற்றம் குறை—காலத்துக்கேலா புலன்களிருப்பின், உடனடியாகச் சுட்டிக்காட்டி ஒதுக்கச் செய்யவல்ல துணிவும் வாக்குச் சாதுரியமும் பெற்றுமுள்ளார். இந்த ஆற்றல் இவருக்குத் தலையாய சிறப்பு.

தலைவருக்குள்ள முக்கிய ஆட்சித் திறமையான
இதனை யிதனாலிவன் முடிக்கு மென்றாய்ந்து

அதனை அவன்கண் விடல்

என்ற நாயனார் கூறும் இலக்கணம் இவர்பால் முற்றும் பொருந்தியுள்ளது.

மதிநுட்ப நூலோடுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற்பவை.

## தோற்றம்—அன்றும் இன்றும்

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு !

இஃது திருவள்ளுவனர் வாய் மொழி—வாய்மை மொழி—அறவுரை—அறிவுரை. எப்போது?—ஏன் ?—யாருக்காக? யாரை நோக்கிச் சொன்னுர்—சொல்லும்படி நேர்ந்தது, இந்த அறவுரை ?

மக்கள் அண்ணுந்து பார்த்தனர்—பார்க்கும்படி செய்யப்பட்டனர்—நல் வாழ்க்கைக்காக—நலிவு நீக்கத்திற்காக—இன்பத்திற்காக— ஆனல் இந்த இன்பம் பெறுவது இந்த வுலகிலல்ல—இந்த உடலுக்கல்ல -- இந்த வாழ்க்கைக்கல்ல. ஆனல், வானுலகில் -- எங்கோ இருப்பதாகக் கூறப்படும் அந்த இன்ப லோகத்தில் -- அதுவும், இந்த வுடலிலல்ல. இந்த உடல் செத்து மடிந்து சுட்டுச் சாம்பலாக்கப்பட்டு ; அல்லது புதைந்து புழுவரித்து, மண்ணோடு மண்ணுன பின்னர்—ஏதோ ஒன்றுக்கு— ஆத்மாவுக்கு—சுகவாழ்வாம் சிறப்பாம்—சீர்த்தியாம்—பேரின்பமாம்.

இந்தப் பேரின்பமோ, பெயரளவில், சொல்லளவில், ஒரு சாரரால் கூறப்படும் 'அந்தர" இன்பம். இதற்காக, அண்ணுந்து பார்க்கச் செய்யப்பட்டனர் —கும்பிட, தொழ, வேண்டுதல் விடுக்க—முறையிடும்படி செய்யப்பட்டனர். வெண்முகிலிலே

மழையைக் காட்டும் கூற்றில்—கற்பனையில்.

மூடக் கொள்கைகள்—குருட்டு நம்பிக்கைகள்—புல்லுருவி நின்றன ; நாடெங்கும்—மக்கள் மனமெங்கும். அறிவு ஆய்வறிவு — வாழ்வதற்கான நல்லறிவு விலங்கிடப்பட்டு, வெளியில் தலைகாட்டாது சிறையிடப்பட்டுக் கிடந்தது. சொந்த அறிவைப் பயன்படுத்தி, தன் திறமையால், தன் வாழ்க்கைப் பாதையைத் தானே செப்பனிட்டு, தன் விருப்புக்கும் வாய்ப்புக்கும் ஏற்ற வகையில் பண்படுத்திக் கொண்டு, நல்வாழ்வு வாழ வகையற்ற நிலைமை ஏற்படுத்தப்பட்டிருந்தது.

'விதி' — 'கருமம்'—'முன்வினை' என்ற சொற்சித்திர வேலிகள் — தடுப்புகள் — அகழிகள் — வலைகம்பிக் கூண்டுகளைக் கொண்டு தடுப்புக் கட்டப்பட்டிருந்தது.

"இறைக்காத கிணறு நாறும், பயன்படுத்தாத அறிவு பாழ்படும். உழைக்காத உடல் நலிவுறும்—வாழ்வும் பாழ்படும். பிறர் மதியிலே ; சொல்லுறையிலே பயிற்றுவிக்கப்பட்ட அறிவு, கண்ணைக் கட்டிக் காட்டிலே விட்டதுபோல தடுமாற்றம் தரும் ; பிறர் உதவியின்றி இயங்க வியலாத நிலைமை வாய்க்கும்.

தொட்டனைத்து ஊறும் மணல்கேணி மாந்தர்க்குக் கற்றனைத்து ஊறும் அறிவு.

என்ற மெய்மையை--பலன் பயக்கும் அறிவுத் துறையை, அந்த கட்டிய கண்ணனுருக்கு--அறிவு மழுங்கித் தடுமாறி, பிறர் அறிவை ஊன்று கோலாகக் கொண்டு பித்தளித்துக் கொண்டிருந்த மக்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டிய நிலைமை--காலம். ஆம்...இந்த நிலவரத்தில்தான் தோன்றினுர், அறமொழிச் செல்வர்-- பொய்யாமொழியார் ; திருவள்ளுவனுர், சொன்னுர். பிறர் மதியில் பட்டுத் தடுமாறும். மாக்கள் நிலைமையிலிருந்த மக்களை நோக்கி--"கேட்ட பொருளின் மெய்ப்பொருளைத் தமது சொந்த அறிவு கொண்டு ஆராய்ந்து பார்த்து ஏற்றுக் கொள்ளுதலே நல்லறிவு" என்று ஒவ்வொருவருக்கும் ஆராய்ந்து பார்ப்பதற்கான பகுத்தறிவு மதியுள்ளது--அதனைப் பயன் படுத்தவும் பிறப்புரிமையிருக்கிறது--அவ்வாய்வு மதிகொண்டு எதனையும் கணித்துப் பார்த்து நல்லனவற்றைக் கொண்டு; அல்லனவற்றைத் தள்ளுங்களென அறிவுறை கூறினுர்.

சில மதத் தரகர் கூறிய "அந்தர"க் கூற்றுகளிலே-- மூட நம்பிக்கைகளிலே பட்டு, மக்கள் வாழ்க்கை நலிவுற்று நின்ற அக்காலம். இந்தப் பிறவியில்—இந்த வுடலில்—இந்த வாழ்க்கையில் அனுபவிக்க வேண்டிய இன்பங்களைப் பறிகொடுத்தும் ; அவ்வின்பங்களை அடைவதற்கான முயற்சிகளில் ஈடுபடாததும், யாரோ கூறிய, ஏதோ இன்பத்தினை, எப்போதோ அனுபவிக்க ஆசைகொண்டு தவித்துக் கொண்டிருந்தனர்—இலவு காத்த கிளி நிலையில் இந்த உலக வாழ்க்கையை,—இந்த

வுடலை அல்லல் காடாக்கிக் கொண்டிருந்தனர். கற்பனை இன்பத்தில் கருத்தைப் போக்கி—கையில் கிடைத்த இன்பத்தைத் 'தியாக, மாக்கி, தங்களைத் தாங்களே தண்டித்துக்கொள்ளும் சித்திரவதைக்கு உள்ளாக்கிக் கொள்ளும் கருத்தழிந்த நிலவரந்திலே இருந்தனர் மக்கள். இவ்விதம் கருத்தழிந்து தடு மாறும் மக்களுக்கு, நல்லறிவுக் கண்ணளிக்க—கருத்தொளியளிக்க—தத்தமது நல்வாழ்க்கைக்கான பாதையைத் தாங்களே, ஆய்ந்தறிந்து, செப்பனிட்டுக் கொண்டு நல்லின்பம் அனுபவிக்க ; இப்போதே —இவ்வுடலிலேயே—இவ் வாழ்க்கையிலேயே அவ் வின்பந்தைப் பெற்று மகிழச் செய்ய—அதற்கான வழி கூறத்தோன்றினார் திருவள்ளுவனார் மெய்யறிவு அறநூலை அமைத்தளித்தார்.

இது இரண்டாயிரம் ஆண்டின் முன் நிகழ்ச்சியாகும். ஆனால், அதே இரண்டாயிரம் ஆண்டின் முன்னைய நிலவரம், இன்றும், இந்த இருபதாம் நூற்றாண்டிலும் தொடர்ந்து படர்ந்திருக்கிறது. மூட நம்பிக்கை என்ற பாசி படர்ந்துதானுள்ளது. இப்போதும் மக்கள் பல்லோர், மதியிலும் சொல்லிலும் செயலுலிம் — உணர்ச்சியிலும்—வாழ்விலும் வாழ்க்கைத் துறையிலும்—வள்ளுவர் கால நிலைமையின் மறு பதிப்பாகத்தான் உள்ளனர். இந்த நிலவரத்தில், திருவள்ளுவனாரின் மறு பதிப்பாகத் தோன்றியுள்ளார் காஞ்சி அறிஞர். திருமயிலையும் திருக்காஞ்சியும் ஒரு மண்டலத்திலுள்ள அடுத்தடுத்த ஊர்கள்தானே !

அறிவிலே ஒ ற் று மை ம — ஆய்வுமதியிலே இணைந்தபண்பு — எ ளி ய வாழ்க்கையிலேயும் ஒற்றுமை.

## திருவள்ளுவனார்

இது யாம் தீட்டிக் காட்டும் வெறும் எழுது கோல். சொல் சித்திரமோ— தீட்டுக்கோல் ஓவியமோ—உழவலன்பின் மிகைபடு கற்பனைக் கைச் சரக்கோ என்று சிலருக்கு அய்யம் எழக்கூடும் !

இல்லை, இல்லை, மாமதிச் செல்வர்—மக்களுக்கு எழுத்தறிவூட்ட இலக்கண இலக்கிய அறிவு ஊட்டும் மாமதிவாணர்—பேராசிரியர் சூட்டி மகிழ்ந்த சிறப்பு அடைமொழியாம் இது.

அன்று—சுமார் இருபது ஆண்டின் முன் : அறிவொளியூட்டும் மாமதிக் கூடத்திலே, பச்சையப்பன் கல்லூரியிலே, மாணவர் மன்றத்திலே சொல்லாடல்— இ ள ஞ் சி ர ா ர் க ள் தங்கள் மதியொளியை...சொல் திறமையை காட்டும் சொற்பொழிவு. ஓர் சிற்றுருவம் — மாணவர்—அவருடைய சொல்வன்மை — ஆய்வுரை கவர்ந்தது — மாணவர் மனதை மாத்திரமா ?—அறிவுக் கடலான தமிழ்ப் பேராசிரியர் அவர்களின் உள்ளத்தையும். மகிழ்ந்தது —பொலிவுற்றது—களித்தது அவருடைய மனம் —தன் சீடனின் மதி மணி சொற்களைக் கேட்டு.

அந்தக் களிப்பிலே உந்தப்பட்டு, அவருடைய கலைக் களஞ்சியத் திருவாய் ஒலித்தது. ' திருவள்ளுவரே ' என்ற சிறப்புரையை. குமிழியிருந்த மாணவர்கள் களிபேரு வகையால் கைதட்டி ஆரவரித்து மகிழ் வைத் தெரிவித்துக்கொண்டனர்.

குருவளித்த சிறப்புப் பெயருக்குக் குறைவு வராதபடியே, மதியொளியாய் — மருளுற்ற மதி பரவிய மக்களுக்கு நல்லறிவுப் பாதையைச் செப்ப னிட்டுக் காட்டுபவராய் விளங்கி வருகிறார்—மாண வர் அண்ணாதுரை இன்று அறிஞர் அண்ணாதுரை யாகி.

அண்ணாந்து பார்க்கும் மக்களின் ஏமாளித் தனத்தைக் கண்டு கழிவிரக்கம் கொள்கிறார் அண்ணா துரை. அவர்களை அணுகுகிறார் — சொல்லில்—எழுத் தில். நன்மதி சொல்லுகிறார்.

" எங்கே தேடுகிறீர்கள் உங்களுக்கான இன் பத்தை ?—நீங்கள் அறியாத அறியமுடியாத இடங் களிலெல்லாம் கருத்தைப் பாய்ச்சி, ஏன் ஏங்குகிறீர் கள் ? பசிக்கிறது இப்போது. தேவைப்படுகிறது உணவு இப்போதே — கூழோ — கஞ்சியோ, எங்கோ, ஏதோ ஒரு மன்னாதி மன்னன் மாளிகையிலே, அறுசுவை யுண்டி யிருக்கிறது என்று யாரோ கூறு கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். காணாத— காணமுடியாத—எங்கோ வுள்ள அந்த அறுசுவை யுண்டியை அடைய நீங்கள் ஆசைப்படுவீர்களா ? —முயற்சிப்பீர்களா ? அல்லது உடனடியாகப் பசி

தனிய—வகையிலுள்ள பண்டங்களைப் பயன்படுத்தி, தாய்த்த வுணவை—கூழோ, சோறோ—உட்கொள்ள முற்படுவீர்களா? அல்லது அரண்மனை அக்கார வடிசிலை எண்ணி யெண்ணி; கையிலுள்ள கூழை உதரித் தள்ளி—பிறருக்குக் கொடுத்துவிட்டு பசியால் துடிதுடித்து உயிர் விடுவீர்களா? அப்படி ஏதாவது ஓர் இன்பம்; பேரின்பம் இருந்தால் இருக்கட்டுமே—கிடைத்தபோது பார்த்துக்கொள்ளலாம் அதை. இப்போது நாம் உயிர் வாழ உள்ள இன்பத்தை முதலில் பயன்படுத்திக்கொள்வோம், அதற்கான முயற்சியில் ஈடுபடுவோம். இதுவே பயன்றிந்த அறிவுச் செயல்" என்ற கருத்தைத் தான் திருவள்ளுவரும் வலியுறுத்துகிறார்.

எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு.

உலகம் எவ்விதம் வாழ்கிறதோ அந்த வாழ்க்கைக் கேற்ப அமைவதுதான் அறிவு என்று மற்றும்,

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்.

என்கிறார்.

நாட்டின்—நாட்டு மக்களின் நட்ப்புக்கும் நல்வாழ்விற்கும் பழக்க வழக்கத்திற்கும் ஏற்ப அமைவதுதான் அறிவு என திருவள்ளுவரும் வலியுறுத்தும் நட்பு. மெய்மையைத்தான் காஞ்சி அறிஞரும் வலியுறுத்திப் பிரசாரம் செய்து வருகி

ருர். காலத்திற்கும், நாட்டு நடப்புக்கும் மக்களின் நடப்புப் பண்புகளுக்கும் ஏலாத பத்தாம் பசலிக் கோட்பாடுகளைக் கைக்கழுவி. நடப்புக் கேற்ற பழக்க வழக்கங்களைக் கொண்டு, நடப்பிலே நற் பயனுறுங்களென்கிருர்.

சொல்லுதல் பயனுள........

இந்த இருபதாம் நூற்ருண்டின் திருவள்ளு ளுரின் — அறிஞர் அண்ணுதுரையின் எழுத்திலே— சொல்லிலே, மக்களுக்கு ஏன் அவ்வளவு கவர்ச்சி— ஆர்வம்—மகிழ்ச்சி ?

எத்தனை தடவை படித்தாலும், கேட்டாலும் இன்னும் ஒரு தடவை படிப்போம் — இன்னும் கொஞ்சம் கேட்போம் என்று ; காலம் கழிவதும் தெரியாது ; மயங்கி மகிழ்கின்றனரே மக்கள் ! ஏனே ? எதனுலோ ?

இங்ஙனம் மக்கள் மகிழ்வதற்கான காரணத்தை பொய்யாமொழியாரே சித்தரித்துக் காட்டுகிருர், கனிமொழியில்.

" சொல்லுக சொல்லில் பயனுள "

ஆம். காஞ்சி கனிவின் மொழியார் சொல் வனவும் எழுதுவனவும் பயனுளவேயாம். மேலும் அந்தப் பயனுள கருத்துக்களால் அடையும் பய

னும், எப்போதோ, யாருக்கோ, எந்த உலகத்திலோ என்று அய்யம் கொள்ளும் பண்பினதல்ல. இப்போதே — இந்த வாழ்க்கையிலேயே — தத்தமக்கும், கைமேல் சூழ்ந்தவர்களுக்கும் — பொதுப்படையாக நம்முடைய வாழும் மக்களனேவோருக்கும், கைமேல் பலன் தரும்—பலனுக்கிக் கொள்ளும் ஆக்கத் துறைக் கருத்துக்களைத்தான் ஊக்கமூட்டும் முறையில் ; தெள்ளிய பானியில், அனைவரும் எளிதில் உணர்ந்து புரிந்து — கைக்கொள்ளத் தகுந்த எளிய ; ஆனால் சித்திரக்கோவை நடையில் கணித்தளித்துதவுகிறார். " இப்போதே முயற்சியுங்கள்—அம்முயற்சி உங்களுடைய பிறவிப் பண்பு. அம்முயற்சிக்கான அறிவும், ஆற்றலும், செய்திறனும் வாய்ப்பும் வசதியும் உங்களுக்கே இருக்கின்றன. அந்த அறிவையும் ஆற்றலையும் ; உங்களுடைய ஆக்கச் சக்தியைக் கொண்டே, ஊக்கமிக்க உங்களுடைய உடல் — உறுப்பு—புலன் வகைகளையும் பயன்படுத்துங்கள். பயன்படுத்தி ; சமைத்துப் படைத்து உண்ணுவதுபோல் — அந்த உழைப்பின் பயனை இப்போதே அனுபவியுங்கள் " என்று தான் நன்மதி செப்புகின்றார் ; செழுமதிச் செம்மல்.

மற்றும் மக்களுடைய உடைமைகள், செல்வங்கள் அனைத்திலும் சிறந்தது எது ? அதாவது நல்வாழ்வு வாழ்வதற்குப் போதுமான ஊதியம் அடைவதற்கான கையிருப்பு மூலதனம் எது ? ஊக்கம் — ஊக்கம்தான் என்று வலியுறுத்துகிறார் ; உலகறிவுக் கருத்துக் கருவூலச் செல்வர்—அறிஞர் துரை. இக்

கருந்தனத்தைத்தான் தீட்டுகின்றார் திருவள்ளுவ ரும்.

> " உடையரெனப்படுவது ஊக்கம் அஃதில்லார்
> உடையது உடையாரோ மற்று."

என்ற குரள் சித்திரத்தில்,

## ஆசிரியர் அண்ணா

> " குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
> மிகை நாடி மிக்க கொளல் "

இஃது, எழுத்தாளர்களின் — முக்கியமாகப் பத்திரிகாசிரியர்களின் நல்லிணக்கம். அதாவது, எந்தப் பொருளாயினும் அதனை நுணுகி ஆராய்ந்து பார்த்து, அதனிலுள்ள நற் பண்புகள், தகாப் பண்புகள் ஆகியவற்றைத் தெளிந்து, கண்டு பிடித்து, தகாப் பண்புகளை—தீங்கு விளைவிக்கும் புலன்களைச் சுட்டிக்காட்டி, அவற்றை அகற்றி, நல்வழிபட வேண்டுமென்றும் சுட்டுவர் ; அகற்றவும் வழி துறை கூறுவர். நல்லனவற்றை, சல்லடைபோல் தெளிவித்து எடுத்துக்காட்டுவர் ! அவற்றின் சிறப்புகளையும் விளக்கம் செய்வர். நற்பலன்களைத் தெளிவுறுத்துவர். நல்வழிகளை வகுத்தளிப்பர். உலகோர்க்கு ஒளி காட்டுவார்கள். ஆயினும், இவர்கள், பெரும்பாலும் புத்தகப் புழுக்களாய் ஆராய்ச்சிலேயே ஈடுபட்டிருப்பதால் — ஆழ்ந்த கருத்தில் ஊன்றிப் போயி

ருப்பதால், சாதாரண உலகத்தோடு சரளமாகப் பழக வியலாதவர்களாக வுள்ளனர். உலகமும் இவர்களுடைய போக்கை உணர்ந்து நடக்க வியலாததாகவுமுளது. ஆகவே இவ்விரு குழுவினரும் (பத்திரிகாசிரியர்களும் — உலகோரும்) நெருங்கி, சரளமாகப் பேச வாய்ப்பு அதிகம் கிடைப்பதில்லை. அப்படிப் பேசினாலும், ஒருவர் எளிதில் புரிந்து கொள்ள முடிவதில்லை. ஆசிரியர்களின் மனமும் கருக்கும் ஆராய்ச்சிக் கடலில் ஆழ்ந்து அவ்வாராய்ச்சிக் கடலலைகளில் மிதந்து கொண்டிருக்கின்றன. அந்த ஆராய்ச்சி ஓட்டத்திற்கு சிறு தடையோ —தொல்லையோ ஏற்பட்டாலும் அவர்களுக்கு மனக் கொந்தளிப்பு ஏற்படும். ஆழ்ந்து யோசிப்பதால் உடற் சூடும், மூளைச் சூடும் ஏற்படுவதுவே இக் கொதிப்பின் உடனடிக் காரணம்.

பெரும்பாலான ஆசிரியர்களின் முகத்தில் ஒரு வகை சோர்வுக்களையும் கடுகடுப்புத் தோற்றமும் தென்படும். பேச்சும் சிடுசிடுவெனவும், ஊசிப் பட்டாசு வெடிப்பது போலவும்—எளிதில் கருத்துப் புலனாகாமலும், தொடர்விட்ட வாசகங்களைக்கொண்டும் கருத்துப் பின்னல் களுடனும் இருக்கும்.

இந்த விசித்திர பந்தனம் பேச்சுக்களை. சாதாரண மக்கள் — ஆசிரியர்களுடன் நெருங்கிய பழக்கமில்லாதவர்கள் புரிந்து கொள்வது கடினமே. தெளிவு படுத்தும்படி கேட்டு வைத்தாலோ, ஆசிரியரின் சீற்றம்தான் பதிலாகக் கிடைக்கும்.

இத்தகைய பண்புக்கு விதிவிலக்கானவர்களும் இல்லாமல் போகவில்லை. புதிர்போட்டுப் பேசுவர்

நகைச்சுவையுடன் சித்திரக் கோவையில் உரை யாடுவர். கேள்விக்கு நேர் பதிலளிக்காது ; எதிர் கேள்வி கேட்டு, பதிலளிக்கும் விசித்திர துறையை யும் கொண்டிருப்பர். வெடிச் சிரிப்புச் சிரிப்பர் நண்பர்கள், உடனுழைப்போர் — உடனுறைவோர் ஆகியோருக்கு, இடுகுறிப் புனைப்பெயர்களிட்டு அழைத்து மகிழ்வர்-மகிழவைப்பர். தொடக்க காலத் தில் இவர்களுடைய பேச்சும் போக்கும்—கிண்டல் போலத் தோன்றும்—கடுகடுப்பாக இருக்கும்— சீரவைக்கும் சிந்தனை யற்றவர்களை —அழவைக்கும் அனுபவமற்றவர்களை புகார் கூறச் செய்யும் புதியவர் களை—செம்முகங் காட்டி முணுமுணுக்கச் செய்யும் முன் கோபிகளை.

அனுபவப்பட்டு — நிதானித்து யோசிக்கும் பழக்கமும் பண்பட்டுவிட்டால் ; அந்தப் பேச்சுக் களில், அமுதப் பண்புகளும் அலர்ந்த அறிவுரை களும் நன்னெறிகளும் பொதிந்திருப்பதைக் கண் டறியலாம். மற்றும், எளிதில் அறிவூட்டும் வன் மையும், இந்த தனிச் சிறப்பு முறை உரையாட லுக்கு உள்ளதையும் உணரலாம். சொல்லுபவர் களுக்கும் கேட்பவர்களுக்கும் அலுப்புத் தட்டாது கருத்து காட்டும் தலை சிறந்த முறை இது.

இத்தகைய பண்பினர், முகத்தோற்றம் ; அவர்கள் தனித்திருக்கையில் அமைதி கொண்ட ஆழ்கடல் போன்றிருக்கும். நண்பர்கள்; உரையாட வந்தவர்கள் ஆகியவர்களிடையே ; மதிகண்ட மாகடல்போல் பொங்கும்; இவர்களுடைய கலைக்கூடலுள்ளம் கருத்து அலைகள், நகைச்சுவை நற் கருத்துக் கோவை

களுடன் துள்ளிக் குதித்து வெளிப்படும். வெடிச் சிரிப்பு—கருத்துச் சிரிப்பு—கள்ளச் சிரிப்பு—கருத் துணரும் சிரிப்பு—கருத்துணர்விக்கும் சிரிப்பு எல் லாம் நடனமாடும் அவர் முகத்தில்—நடனமாடச் செய்வார் இந்த பாவனைகளை, தம்மைச் சூழ்ந்துள் ளோரின் அகத்திலும் முகத்திலும்.

'ஆழ்கடல் முகத்தோற்றம் ; கடுகடுப்பற்ற பாவம், நண்பர்கள் நெருங்கிடில் களிப்பொளி சொல்லிலே கருத்தொளி — மகிழ்வொளி ; வாண வேடிக்கைக் காட்சிபோல் ' விதவித சொற் சித்திரச் சொல்லாடல்கள் ; ஆகிய பல்சுவைப் பண்புகளில் தலைசிறந்து விளங்குபவர் ஆசிரியர் அண்ணாதுரை யவர்களே !

வீட்டிலே இருந்து கிளம்புவார்—கிளம்பும்படி செய்யப்படுவார். விரைந்து செல்லும் மத யானை நடையில் அலுவலகம் நோக்கி ஏகுவார், அலுவலகத் திற்குள் காலடி வைத்ததும், பாயும் அவருடைய கலையாய்வுக் கண்கள் ; ஒரு முறை. ஒரு நொடி, அலுவலகத்திற்குள் உள்ளோர் பக்கம் அவருடைய வருகை—அவருடைய மின்வெட்டுப் பார்வை ; அவ் வலுவலகத்துள்ளோர் அனைவருக்கும் ஒரு வகை களிப்பையும் மன எழுச்சியையும் ஊட்டும். ஆயினும் அவர் இடையில் நின்று, யாரிடமும் பேச்சுக் கொடார். ஒளிவீசும் களிப்பு முகபாவத் தில் எழுது கோலைக்கையில் எடுப்பார். பெரும் பான்மையான பிற பத்திரிகாசிரியர்களைப் போல் இவர் பிற பத்திரிகைகளைப் புரட்டி, ஆழ்ந்து

ஆழ்ந்து தேடிக்கொண்டிருக்கமாட்டார். இவர் பத்திரிகைகளைப் படிப்பது, குழந்தைகள் புத்தகங்களிலுள்ள பொம்மைகளைப் பார்ப்பது போன்று தானிருக்கும்.

இவருடைய அறிவுப் புல்னும் நுண்பதிவு விசைப் புகைப்படக் கருவியோ (Seap Shot camera) பார்த்த ஒரு பார்வையிலேயே—விசைப் புகைப்படம் பிடிப்பதுபோல்—கருத்துக்கள் அவர் மனதில் பதிப்புக் கொண்டுவிடும்—இடையிடையே நண்பர்களுடன் பேச்சுக் கொடுத்துக்கொண்டுமிருப்பார். சிரிப்பார்—நகைச்சுவை சிறு நாடகங்களும் நடத்துவார்—சிரிக்க வைப்பார் சூழ விருப்பவர்களையும். அதே போதில் தலையங்கத்திற்கு வேண்டிய கருத்துக்களும் அவருடைய மனதில் உருவாகிக் கொண்டிருக்கும்.

“ அப்பா ! நான் எழுதித் தொலைக்கவேண்டியிருக்கிறதே ! நேரம் ஓடுகிறதே. தொல்லையாக விருக்கிறது. நீங்கள் பேசுவதும் பேச்சுக்கொடுப்பதும், போய் வாருங்கள். பிற விஷயங்கள் பின்னர். சாவகாசமாகப் பேசலாம் ” என்று சொல்லி சூழ விருப்பவர்களை விரட்டிடும் ஆசிரியர்கள் பல்லோர். சிடுசிடுவென விழுவோரும் உண்டு. “மனதில் எண்ணிக் கோர்த்த கருத்துக்கள், இந்தத் தொல்லைகளால் கலைந்துவிட்டதே ” என்று தலையில் கை வைத்துக் கொண்டு, சங்கடப்படுவோரு முண்டு. ஆனல் அண்ணாவிடம் இந்தத் தொல்லைகள்

எல்லாம் மூச்சுக் காட்டுவது கிடையாது. அவரும் எழுதிக்கொண்டிருப்பார் நாமும் பேசிக்கொண்டிருக்கலாம், அவருடைய எழுத்தும் ஓடும். நம்முடைய பேச்சும் ஓடும் : அவரும் இடையிடையே பேச்சில் கலந்து கொள்வார், துண்டுத் துக்கடா சொற்களையும் உதிர்ப்பார்—சிரிக்க, சிரிக்க அவர் எழுதுவதும் சிதைவுருது. நாம் பேசுவதும் தடையுருது, கேள்வியும் கேட்பார். பதிலும் தருவார்.

“ அவர் எழுதுகிறாரா ? பேச்சுக் கொடுக்கிறாரா? அல்லது நாம் சொல்வதையே எழுதிக் கொள்ளுகிறாரா ? அல்லது நாம் கேட்பதற்குத்தான் பதில் எழுதுகிறாரா ?” என்றும் திகைக்கச் செய்யும் அவருடைய போக்கு. அன்று மாலை வெளியானதும், “ விடுதலை ” செய்தித்தாள் — அதில் அச்சிடப் பட்டுள்ள தலையங்கத்தைப் படித்துப் பார்த்தால்” மேற்காட்டிய நமது எண்ணம் பொய்யப்படும். நாம் கேட்டதற்கும் “ விடுதலை ” யிலுள்ள தலையங்கத்திற்கும் எவ்வித தொடர்பும் இருக்காது.

“ இவரென்ன. பல்பொருள் ஒரு நிரையுணர் நுண்மதிப் புலவரோ ?” (சதாவதானி) என்றும் அய்யுறச் செய்யும்.

தலையங்கம் ‘தீட்டிக்’ கொண்டிருப்பார்—நண்பர்களுடன் நகைமுகச் சொல்லாடல்கள் — காண

வந்தவர்களிடம் உரையாடல்; இடையிலே வரும் அழைப்பு : "அய்யா அழைக்கிறார்" என்று. "ஊம் ஊம்". என்ற ஒலி அவர் வாயினின்றும் கிளம்பும். சூழவுள்ள தோழர்கள், "அச்சப் பணிவு"ப் பாவம் பிடித்து : ஒரு நகைச்சுவைக் காட்சி நடத்துவர். சிரிப்பொளிரும் ஆசிரியர் அண்ணாவின் மதிவதனத்தில். வீசித்தெழுந்திருப்பார். சர்க்கஸ் யானை நடை நடையிட்டு, பரபரப்புடன் செல்வார் "அய்யா" இருக்கும் தனியறையை நோக்கி.

சில நிமிடங்கள் ; அதிகம் போனால் அரை மணி கழித்துத் திரும்புவார். (அலுவலகத்தில் இவ்விருவரும் நீண்ட நேரம் தனித்துப் பேசிக் கொண்டிருந்ததை என் அனுபவ காலத்தில் கண்டதில்லை.) அறைக்குள் செல்லும்போது இருந்த அதே முகத்தோற்றம் — பொலிவு ; துள்ளும் ஒளி வீச்சும் விழிகள், திரும்பும் போது காணலாம். "அய்யா"விடம் என்ன பேசினான் ; பேச்சின் தன்மை என்னவென்று, அவருடைய முக பாவத்திலோ பேச்சின் போக்கிலோ இருந்து கொஞ்சமும் யூகிக்க வியலாது.

வந்ததும் "புதுத் தெம்பு" ஏற்றிக் கொள்வார். சிரிப்புடன், அமர்ந்ததும் ; எழுதுகோலை மீண்டும் கையில் கொள்வார். மளமளவென ஓடும் ஆசிரியரின் எழுதுகோல்—சித்திரப் பின்னல்களைப் போன்ற எழுத்துருவங்கள் காட்சி யளிக்கும் பல தாள்களில்;

அடுக்கடுக்காக ; சுருக்கெழுத்தோவென்றும் அய்யுறச் செய்யும் அவர் தீட்டிடும் எழுத்துக்களின் உருவத் தோற்றமும், அவர் எழுதும் விரைவும்,

எழுதி முடித்து ; அச்சுக் கோர்வுக்குக் கொடுத்ததன்பின் மீண்டும், தராளமாக, சரளமாகப் பேச்சு, நகைச்சுவைக் காட்சி. திருமண மண்டபமா ; மாலைப் பொழுது போக்கு உல்லாச உரையாடல் மண்டபமா, எனவும் எண்ணச் செய்யும் அப்போது, ஆசிரியர் பீடம் உள்ள அந்த அரங்கு. மற்ற ஆசிரியர்களின் அறைகளில் காணும் ஏகாந்தயோகச் சோகத் தோற்றம் இவரிருக்கும் மிடத்தில் இம்மியும் காணக் கிடைக்காது. இஃது இவருக்குத் தனியுரிமை சிறப்புப் பண்பு.

இந்தச் சிறப்பின் சிறப்பும், நற்பலனும் இவருடைய எழுத்துக்களிலும் தோற்றமளிக்கும். கடும் தோற்ற ஏகாந்த ஆசிரியர்களின் எழுதுகோல்கள் கொட்டும் கடும் எழுத்துக் கோவைகளை — கடும் நடையில், தடியடி போக்குக் கண்டனச் சொற்களை, எழுதிவிட்டு சலிப்போடு பெருமூச்சு விட்டு அமர்வர் அந்த எழுதுகோல் வீரர்.

ஆனல், இந்தச் சிரிப்பு உரையாடல், ஆசிரியரின் எழுத்துக்களோ — தலையங்கங்களோ, அவரைப் போன்று, அவருடைய உரையாடல்களைப் போன்று, சிரிக்கும் — சிரிக்கச் செய்யும் மகிழ்விக்கும் ; ஆச்சரி

யப்படச் செய்யும் ஆய்ந்து ஆலோசிக்கத் தூண்டும் — தம் பணிக்கும் ஊக்கமூட்டும். அதற்கான வழி களை தெளிவுறக் காட்டும்.

" பல்மலர் வனமா ? பூங்கொடி பரவிய பந்தலா ! வான வேடிக்கையா ? பல்பொருள் காட்சிக் கூட்டமா ? புத்தக நிலையமா ? நாடக அரங்கா ? கலைக் களஞ்சியமா ? அறிவுக் கரு வூலமா ?" என்றும் வியப்புறச் செய்யும். இவ ருடைய தலையங்கங்கள், விரும்புவோர் உள்ளம் போல்—விருப்பம்போல்—மனோரஞ்சித மலராக— எல்லாம் பொதிந்து. பொலிந்து காணும் ; கவர்ச்சி மிக்கத் துறையில், இவருடைய தலையங்கங்கள் ஒவ்வொன்றும்.

" அறிவுடையோர் எல்லாம் உடையார்" எல் லாம் தரவல்லார், என்ற குரல் மெய்மையை மெய்ப் படுத்தும் இவருடைய எழுத்துச் சித்திரக் களஞ்சியங்கள்.

" உள்ளத்தனையது உயர்வு "
என்றுரே நாயனாரும், அது மிக மிகப் பொருந்தும் இவர்பால்.

" யார் இந்த எழுத்துலக புதுமைச் சிற்பி ?" என்றுதான் வியப்புடன் வினவினர் ; முதல் முத

யில்; "விடுதலை"யில் இவருடைய தலையங்கச் சித்திரக் கோவைகளைக் கண்டவர்கள். சாதாரண பாட்டாளி மக்கள் மாத்திரமன்றி — கலைஞர்கள், பாவலர்கள், நாவலர்கள், ஆசிரியர்கள் எல்லா வற்றிற்கும் சிறப்பாக ஆக்கப் புலவர்—இயந்திரச் சிற்பி, கோவை, திருவாளர் ஜி. டி. நாயுடு போன்ற வர்களும், இவருடைய ஆக்கவூக்க அறிவுரைகளைக் கண்டு, மகிழ்வும் பெருமையும் கொண்டனர்—பாராட்டினார்—பரவச முற்றனர்; கருத்துச் சிற்பி யான அறிஞர் அண்ணு திராவிடத்தின்—தமிழ் மொழியின் மாமணியாகவும் ஒல்காப் புகழ் அறிவூற் ருகவும், சொல்லில் பயனுள சொல்லும்—தீட்டும் அறிவண்ணலாகவும் நலிவுதரும் பழமைப் பழக்க வழக்கங்களை ஒழித்து, மக்கள் நலம்பெறப் புது மைக் கருத்துக்களையும் வழிகளையும் அளிப்பதில் ஆதவனுகவும் விளங்கிவருகிருர்.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல அரச"ராகவும்

"தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு
காமுறுவர் கற்றறிந்தோர்"

என்ற இலகணத்திற்கு எடுத்துக்காட்டாகவும் இருந்து வருகிருர்.

96

கண்டாருண்டு அவர் மதியைக்
கணித் தறிந்துளம்
விண்டாரிலை கற்றனைத்து
ஊறும் அறிவென்றே
வண்ணம் வள்ளுவனார்
வகுத்தளித்த வழி வழியாங்கு
அண்ணாவும் அறிவுலக
சொல்லின் செல்வராமால்.